உ



திருநெல்வேலி

அருள்மிகு

# தலங்காவற் பிள்ளையார் கோவில்

# மஹோற்சவ மலர்

## 02-07-1999

திருப்பணி அன்பளிப்பு 100/-

தலங்காவற் பிள்ளையாரின் மஹோற்சவ மலர்
சிறப்பாக மலர வாழ்த்துகின்றோம்!

உங்கள் மழலைச் செல்வங்களின்
உயிரோவியமான
புகைப்படங்களை கலரில் எடுத்து மகிழ
இன்றே விஜயம் செய்யுங்கள்

*BABY PHOTO* **பேபி போட்டோ**

பலாலி வீதி, கந்தர்மடம்.

உங்கள் ரீ, வி, டெக் பழுதடைந்துவிட்டதா!
கவலை வேண்டாம். நீண்டகால அனுபவம் மிக்க
தொழில் நுட்ப வல்லுநர்களால்
குறைந்த கட்டணத்துடன்
உடன் திருத்தித் தருபவர்கள்

**விக்னா எலெக்ரோனிக்**

ரீ. வி, டெக் திருத்துபவர்கள்

தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

உ

சிவமயம்



சீரிலங் காபுரி யாழ்நகரில்
திருநெல் வேலித் தலங்காவற்
பேரிலங் கும்பிள்ளை யாரவராம்
பெருந்திரு முறைதரு பெருமானைப்
பாரிலங் குஞ்சைவப் பரிமளமாய்ப்
படையல் நெய்தேன் பாற்பொங்கல்
காரிலங் கறுகிள நீர்கரும்பாற்
கருத்தொரு மிக்குங் கழல்பணிவாம்.

திருநெல்வேலி

அருள்மிகு

# தலங்காவற் பிள்ளையார் கோவில்

# மஹோற்சவ மலர்

## 02-07-1999

# காலந்தோறும் விநாயகர் வழிபாடு

— கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் —

இந்து சமயத்தில் விநாயக வழிபாடு முதன்மை பெற்று விளங்குகிறது. இந்து சமயம் பரவியுள்ள இடங்களிலும் இவ்வழிபாடு சிறப்படைந்துள்ளது. ஸ்ரீ சங்கரர் நிறுவிய ஷண்மதங்களுள், காணாபத்தியம் ஒரு நெறியாக அமையினும், விநாயகரைத் தலைமைத் தெய்வமாகக் கொண்டு நிகழும் வழிபாடு, கோயில்களிலும், இல்லங்களிலும் காலங்காலமாக முதன்மை பெற்று வருகிறது. கணபதிக்குரிய வழிபாடு சாதாரணமாக, ஆற்றோரங்களிலும், குளக்கரைகளிலும், புனிதமான மரங்களுக்கடியிலும், சந்திகளிலும் இடம்பெறுவதைக் கொண்டு, இவ்வழிபாடு எங்கணும் பரவிய தன்மையை நாம் உணர முடிகிறது. தமது நாளாந்த வாழ்க்கையில், எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், இன்னல் இடையூறின்றி நிறைவு பெறவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையாகக் கொண்டே இந்துக்கள் இத்தெய்வத்தை வழிபட்டு வருகின்றனர். விநாயகருக்குரிய திருநாமங்களில் பல இதனையே உட்பொருளாகக் கொண்டு விளங்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சிறப்புமிக்க விநாயக வழிபாட்டின் ஐதீகங்களையும், வரலாற்றுக் குறிப்புக்கள் சிலவற்றையும் தொகுத்துத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இருக்கு வேதத்தில் இத் தெய்வம் பற்றிய குறிப்புக் காணப்படுவதைக் கொண்டு இவ் வழிபாட்டின் தொன்மை வேதகாலத்துக்குரியது எனக் கூறுவர். வேத காலத் தெய்வங்களாகிய இந்திரன், பிருகஸ்பதி, உருத்திரன் மருத்துக்கள் பற்றிய வருணனைகளில் கணபதியின் மூலம் இருப்பதாகச் சிலர் கருதுவர். விநாயகரின் திருவவதாரம் பற்றி மகாபுராணங்களாகிய சிவபுராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்தபுராணம் முதலியவற்றில் உள்ளன. புராணங்களின்படி விநாயகர் சிவனது தெய்விகக் குடும்பத்தில், மூத்த புதல்வராகவும், பிள்ளையாராகவும், கந்தனுக்கு மூத்தவராகவும் விளங்குகின்றார். சில கதைகளின்படி, இவர் சிவனுக்கோ அல்லது பார்வதிக்கோ மட்டும் மகனாகப் பிறந்ததாயும், வேறு சில இவ் இருவருக்கும் இவர் மகனாய்ப் பிறந்ததாகவும் கூறுகின்றன. சிவனது நெற்றியிலிருந்து இவர் பிறந்ததாக வராக புராணம் கூறும். சுப்ரபேதாகமத்தில் சிவனும் பார்வதியும் இரு யானைகளாய் உரு மாறியிருந்தபோது, விநாயகர் தோன்றினார் எனக் காணப்படுகிறது. சிவபுராணம் பல படைப்புக் காலங்களில் பல்வேறு வகையாக விநாயகர் தோன்றினார் எனக் குறிப்பிடுகின்றது. விண்ணவரும், மண்ணவரும் விநாயகரைப் போற்றி வழிபட்டு நலம் பல பெற்ற வரலாறுகள் உண்டு. விநாயகரின் வழிபாட்டுச் சிறப்பு இவ்வகையில் விண்ணகத்தோடும் தொடர்புடையது. இத்தகைய விண்ணகத்துத் தெய்விக பெருமைகளை முன்வைத்து மண்ணகத்தாரும் தமது வாழ்வினை வளப்படுத்திக் கொள்வதில் விநாயக வழிபாட்டையே முதன்மையாகக் கொண்டதில் வியப்பில்லை.

"கணபதியே பரம்பொருள்" என்று கோட்பாட்டு ரீதியில் காணாபத்திய நெறியினர் இதனைத் தனிச் சமய நெறியாகக் கொண்டபோதும், ஏனையோர் "விநாயகரே முதற் பொருள்" என்று பிரணவப் பொருளின் வடிவமாக வழிபடுவது குறிப்பிடத்தக்கது. 'ஓம்' என்ற ஒலி உலக வித்தே விநாயகர் என்பது பதஞ்சலி யோக சூத்திரக் கருத்து. "பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்" என்பது வெற்றி வேட்கை தரும் காப்புச் செய்யுளாகும். எத்தகைய ஐதீகங்களையும் விட, பிரணவ ஸ்பரூபி என்ற நிலையிலும் அதன் தோற்றமாகவும் அமைவதே விநாயக

வடிவம் என்பது சிறந்த விளக்கமாக அமைகிறது. தேவாரம் பாடிய மூவரும், திருமந்திரம் பாடிய திருமூலரும் விநாயகரைப் பாடிப் பரவியுள்ளனர். விநாயகர் உபாசகியாகிய ஔவையார் விநாயகர் அகவல் பாடி மகிழ்ந்துள்ளார். வட மொழியிலும், செந்தமிழிலும், எழுந்த இவருக்குரிய பாமாலைகள் எண்ணிறைந்தவை; தெய்விக அற்புதங்களின் பயனாய் இவருக்குரிய காரணப் பெயர்கள் அனந்தம். தல மகத்துவத்தினால் இவருக்குரிய சிறப்புப் பெயர்களும் எண்ணிறைந்தவை. அரித்திர கணபதி, உச்சிஷ்ட மகாகணபதி. ஏரம்ப கணபதி, கங்கை கொண்ட விநாயகர், கடுக்காய் விநாயகர், கற்பக விநாயகர், சங்கட சதுர்த்தி விநாயகர், சங்கடஹர கணபதி, நிருத்த கணபதி, வலஞ்சுழி விநாயகர், பொல்லாப் பிள்ளையார், விகட சக்கர கணபதி, வித்தக கணபதி, முக்குறுணி விநாயகர் போன்ற திருநாமங்களால் தமிழகத்தில் விநாயகர் சிறப்புப் பெறுகின்றார். (1) இலங்கையிலும் இத்தகைய சிறப்புப் பெயர்களும் காரணப் பெயர்களும் விநாயகருக்கு உண்டு. வேத விநாயகர், அரசடி விநாயகர். கற்பக விநாயகர், சித்தி விநாயகர், கையாலயப் பிள்ளையார், மருதடி விநாயகர், பரராஜசேகரப் பிள்ளையார், அரசகேசரிப் பிள்ளையார், முறிகண்டிப் விநாயகர், மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் போன்ற தலங்கள் குறிப்பிடற்பாலன. காடுசூழ் பிரதேசங்களிலேயே விநாயக வழிபாடு பெருமளவிற் தோற்றம் பெற்றுள்ளது. வண்ணார்பண்ணையில் உள்ள காட்டுத்தறை என்னுமிடத்திலுள்ள பிள்ளையார் கோயில் இவ்வகைக்குச் சிறந்த உதாரணமாகும். (2)

இவருக்குரிய கயமுகாசுரசம்கார மூர்த்தி என்ற பெயர் சிறப்புடைத்து கயமுகனால் தேவருக்கு ஏற்பட்ட துயர் தீர்க்க இறைவனால் தோற்றுவிக்கப்பட்டவராகவும், தனக்கு மேல் தலைவன் இல்லாததை உணர்த்தும் விநாயகர் என்ற திருநாமத்துடனும் விளங்குபவர். தனது வலக் கொம்பை ஒடித்து கயமுகனை வதைத்து அடியவர் துயர் தீர்த்தவர். அவனைத் தன் வாகனமாகக் கொண்டு அருள் பாலித்தவர். சிவபெருமானுடைய திரிபுர தகனத்தின் போது தேரின் அச்சு முறித்த, பெருமை இவரது தெய்விக முதன்மைக்குரிய விளக்கமாகும். 'அச்சிறுபாக்கம்' என்ற திருத்தலம் இத் தெய்வீக வரலாற்றின் நினைவாகும். சுந்தரரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசம் சேருமுன் தமது உபாசகியாகிய ஔவையாரை உடன் கைலாசம் சேர்த்த பெருமை, திருவெண்ணெய் நல்லூரிலுள்ள சிவாலயத்தில் பொல்லாப்பிள்ளையாராக எழுந்தருளி மெய்கண்ட தேவருக்கு சூர்ணிகையை செவி அறிவுறுத்தி அருளிய அற்புதம், திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையாராக எழுந்தருளி இருந்து, நம்பியாண்டார்நம்பிக்குத் திருமுறை இருக்குமிடம் தெரிவித்து திருமுறை கண்ட பிள்ளையாராகத் திருநாமம் கொண்ட அற்புதம் காஞ்சிபுராணம் விதந்து கூறும் விஷ்ணுவினது பாஞ்சசன்னிய சங்கைப் பெற்றுக்கொடுத்த அற்புதம், மகாபாரதம் எழுதியருளிய அற்புதம், விகடசக்கர விநாயகர், அகத்தியருக்கு அநுக்கிரகம் செய்த விநாயகர் போன்றவை விநாயக மகிமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள்.

தேவாரங்களிலும் விநாயகர் பற்றிய குறிப்புகள் அவர்தம் பெருமைக்குச் சிறந்த சான்றுகள். நாவுக்கரசரது திருவதிவீரட்டானத்தைப் பற்றிய பதிகத்தில் ''கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்'' (3) என்றும் திருவீழிமிழலையில் இறைவனைப் பாடுங்கால் ''கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும் கயாசுரனை அவரால் கொல்வித்தார் போலும்'' 4) ஆகிய குறிப்புகளால் அப்பர் விநாயகரைப் போற்றுவது நன்கு புலனாகின்றது. விநாயகரின் வழிபாட்டுப் பெருமைக்கு இவை சான்றாகின்றன. சம்பந்தர்; 'கரியின் மாமுகமுடைய கணபதி' என்று குறிப்பிடுகிறார். இவர் ''பிடியதனுருவுமை கொளமிகு கரியது'' என்று திருவலி வலத்திலுள்ள இறைவனைப் பாடும்போது குறிப்பிடும் கருத்து சுப்ரபேதாகாமம் விநாயகர் தோற்றம் பற்றிக் கூறும் கருத்தை ஒத்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தது.

தமிழகத்திலும் இந்தியாவின் ஏனைய இடங்களிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியது போல இந்திய எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளிலும் சிறப்புற்று விளங்கியது. தமிழகத்திலே உழவர் தெய்வம் என்றும் யானைகள் மிகுந்த பண்டைய தமிழ் நாட்டில் விலங்கின வழிபாட்டின் அடிப்படையில் கணேசர் வழபாடு தோன்றிற்று என்றும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. (5)

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் திருக்கோயில் மரபு வளர்ச்சி பெற்ற காலங்களில் விநாயகரின் சிற்பங்களும் பெருமளவில் இடம்பெற வாய்ப்பேற்பட்டது. விநாயகருக்கென்றே தனி ஆலயங்களும் புகழடைந்தன. வட இந்தியாவில் குப்தர் காலத்தில் எழுந்த கோயில்களுள் பிற்கால குப்தர்களால் கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தசாவதாரக் கோயில் குறிப்பிடத்தக்கது. சான்சி மாவட்டத்திலுள்ள தேவகர் என்னும் இடத்தில் உள்ளது இக்கோயில். இது பஞ்சயதன வகைக்கோயில். விநாயகர், சிவன், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய ஐந்து கடவுளர்களின் படிமங்களும் ஒரே கோயிலில் அமைக்கப்பட்டிருக்தலால் இக்கோயில்கள் பஞ்சயதன கோயில் என்ற பெயர் பெற்றன. இக்கோயில்களில் கருவறையில் மூலவராகச் சிவனும் பிராகாரத்திலுள்ள நான்கு மூலைகளிலும் தனித்தனி மேடைகளில் விநாயகர், பார்வதி, விஷ்ணு, சூரியன் ஆகிய நான்கு கடவுளரும் அமைக்கப்படுவர். (6) இங்கு விநாயகரும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒட்டர நாட்டுக் கோயில்களில் (ஒரிசா) மிகப்பழைமை வாய்ந்த கோயிலான பரசுராமேசுவரன் கோயில் ஏறத்தாழ கி. பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இக்கோயிலின் தோற்றக் காலம் பற்றி வரலாற்றாசிரியரிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. எவ்வாறாயினும் இக்கோயிலிலும் கணேசரது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிழக்கிலும் தெற்கிலும் உள்ள சுவர்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் சுவர்களில் மாடக்குழி வரிசையில் ஏனைய தெய்வங்களுடன் கணேசனின் உருவமும் காணப்படுகிறது. (7) வட இந்தியாவில் குப்தர் காலத்தில் காணாபத்திய வழிபாட்டு நெறி முக்கியமடைந்தது எனலாம். விநாயகரை பிரபஞ்சத்தின் தலைவனாகவும் மகாகணபதியாகவும் வழிபடுவது அக்கால மரபாக இருந்தது. (8)

கணேசர் வழிபாடு சிறந்து விளங்கிய இடங்களில் நேபாளமும் குறிப்பிடத்தக்கது. இங்கு பெண்கள் செவ்வாய்க்கிழமைகளில் கணேசருக்கென விரதம் அனுட்டிப்பர். கணேசர் வழிபாடு புத்தமதத்திலும் பிரபலம் அடைந்தது. புத்தர் தமது சீடனாகிய ஆனந்தனுக்கு ராஜகிருகத்தில் கணேசரின் ஹ்ருதய அனுபூதி மந்திரத்தை அருளியதாகக் கூறப்படுகின்றது. இந்த மந்திரத்திற்குரிய கணேசரின் வடிவம் பின்வருமாறு அமையும். முக்கண் பன்னிரு கரங்கள் அவற்றில் பல்வேறு ஆயுதங்கள், நடன நிலை ஆகியவையாகும். அந்த மந்திரம் "நமோபகவதே சூர்ய கணபதி ஹ்ருதயாய" என்று அமையும். (9) இம் மந்திரம் நேபாளத்தில் வழக்கில் உள்ளது. மகாயான பௌத்தரிடையே நேபாளத்தில் கணேசர் சிங்கத்தில் அமர்ந்தவராக ஹேரம்ப கணபதியாக விளங்கும் வடிவம் சிறப்பானதாகும். பௌத்தர்களின் கோட்பாட்டின்படி கணபதி யோக நிலையில் புத்தி தரும் தெய்வமாகவும் சித்தி தரும் சித்திதாதாவாகவும் காவற் தெய்வமாகவும் விளங்குகின்றார். (10) புத்தமதம் மற்றைய நாடுகளில் பரவத் தொடங்கிய காலத்தில் அது கணபதி கோட்பாடு அடங்கிய சில இந்துமதக் கூறுபாடுகளையும் தன்னுடன் கொண்டு சென்றது எனக்கொள்வதில் தவறில்லை. சீனாவில் பௌத்த சந்நியாசிகள் தாந்திரிக அடிப்படையிலான செயல் முறைகளையும் மூலநூல்களையும் பரப்பிய போது அவற்றிலிருந்து சேர்க்கப்பட்ட பகுதிகளில் விநாயகருக்குரிய

இடம் கொடுக்கப்பட்டுள்ளது. (11) சீனாவிலும் ஜப்பானிலும் விநாயகர் இருவகையாக அமைக்கப்படுகின்றார். முதலாவது தனிவடிவமாகவும் இரண்டாவதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்தோனேஷியாவில் பஞ்சமுக கணபதியாகவும் திபெத்தில் நிருத்திய கணபதியாகவும் விளங்கும் நிலையுள்ளது (12)

இலங்கை வரலாற்றில் அநுராதபுரக் காலம் எனப்படும் ஆதி காலகட்டத்தில் இந்துமதம் அழியாத ஒரு மதமாக இந்துக்கள் மத்தியில் மட்டுமல்லாது பௌத்தர்கள் மத்தியிலும் செல்வாக்குடன் இருந்து வந்தமை பற்றி வரலாற்றாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் கிடைப்பனவற்றுள் மிகிந்தலை சைத்தியத்தின் 'வாகல் கட' என்னும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது கி. பி மூன்றாம் நூற்றாண்டளவில் இலங்கையில் பௌத்தர் மத்தியில் இத்தெய்வத்திற்கு இருந்த செல்வாக்கை மிகிந்தலையில் உள்ள புடைப்புச் சிற்பம் காட்டுவதாக அறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (13)

இலக்கியச் சிற்பச் சான்றுகளின்படி விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்தில் தமிழகத்திற் பரவியமை தெரியவருகின்றது. முதலாம் நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்று வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்றைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தான் எனவும் இச்சிற்பம் தற்பொழுது திருச்செங்காட்டான் குடியில் உள்ளது எனவும் கூறப்படுகின்றது. சாளுக்கிய நாட்டில் கி. பி 6-ம் 7-ம் நூற்றாண்டுக்குரிய விநாயகர் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் விநாயகரை சப்த கன்னியருடன் அமைத்தல் வழக்கமாகும். இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலிலும் (10) இத்தகைய சிற்பம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. காஞ்சியில் உள்ள கோயில்களாகிய திரிபுராந்தகேசுவரரின் கோயில், மாதங்கேஸ்வரன் கோயில் ஆகியவற்றில் அர்த்தமண்டபத்தில் தென்புறச் சுவர்களில் விநாயகர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. திரிபுராந்தகேசுவரர் கோயில்களில் கருவறை, அர்த்தமண்டபம் முதலியவற்றின் மூன்று வெளிப்புறச் சுவர்களிலும் சிறிய அளவில் பல விநாயகர் சிற்பங்கள் இடப்பெற்றுள்ளன. பிற்காலப் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலின் தென்புறச் சுவரிலும் கணேசர் சிற்பம் உள்ளது. பல்லவர் கால விநாயகர் சிற்பங்கள் அமர்ந்த நிலை சிற்பங்களாகும். நாற்கரங்கள் - மேலிரு கரங்களில் பாசம், அங்குசம் ஆகிவை விளங்குவன. கீழ்ப்புற வலக்கையில் ஒடித்த தந்தம் கீழ்ப்புற இடக்கையில் மோதகம் ஆகியவை திகழ்கின்றன. முற்காலப் பாண்டியர், முத்தரையர்கள் காலக் குடைவரைக் கோயில்களுள், திருக்கோ கரணம், குன்றாண்டார் கோயில் ஆகியவற்றில் கணேசர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டில் குன்றக்குடி, பிள்ளையார் பட்டி, திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களில் கணேசர் சிற்பங்கள் உண்டு. பிள்ளையார் பட்டியிலுள்ள சிற்பம் கி. பி 6-ம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் சிலர் கருதுவர். (14)

சோழர் காலக் கோயில்களின் அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் உள்ள தேவ கோட்டத்தில், அமர்ந்த நிலையில் விநாயகரை நிறுவுதல் வழக்கமாக இருந்தது. முற்காலச் சோழர் கட்டிய கோயில்களில் பரிவாரக் கோயில்களுள் விநாயகருக்கென ஒன்று அமைக்கப்பட்டது. விநாயகரது செப்புத் திருமேனிகளும் சோழர் காலக் கோயில்களில் இடம் பெற்றன. இவை பெரும்பாலும் நின்ற நிலையில் உள்ளன. விசய நகர, நாயக்க மன்னர் காலத்திலும் கணேசனின் பல்வகைச் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளும் கோயில்களில் இடம்பெற்றன. அவற்றுள் சக்தி கணபதி, நாட்டிய கணபதி, உச்சிஷ்ட கணபதி, ஏரம்ப கணபதி போன்றவை குறிப்பிடத்தக்கன. (15)

தஞ்சையில் திருவலஞ்சுழி என்னுமிடத்தில் துதிக்கை வலப்பக்கமாக அமைந்த விநாயகர் வடிவம் உள்ளது. சாதாரண கடலை அளவு உள்ள பிள்ளையார் ஹம்பியில் உள்ளார். பவானி என்ற இடத்தில் கலைமகள் போன்று வீணையேந்திய நிலையிலும் ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பருபதம் என்ற இடத்தில் குழலூதும் நிலையிலும் உள்ளார். சிங்கத்தின் மீது அமர்ந்து பஞ்சமுகங்களுடன் கூடியவராக திருவெற்றியூரில் காட்சி தருகின்றார். மகாராஷ்டிரத்தில் மார்கோவன் என்னும்மிடத்தில் அஷ்ட விநாயகராக தோற்றமளிக்கின்றார். அம்மை அப்பரை வலம் வந்து மாம்பழம் பெற்ற ஐதீகத்தைக் குறிக்கும் நிலையில் வட ஆர்க்காடு திருவலம் என்ற இடத்தில் எழுந்தருளியுள்ளார்.

தமிழகத்தில் விநாயகர் பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்க வடநாட்டில் தேவியரோடு வழிபடப்படுவது குறிப்பிடத்தக்கது. பிள்ளையார் சித்திபுத்தி என்னும் இரு சக்திகளோடு கூடியவராகவும் வழிபடப்படுகின்றார். அறிவிற்கும் வெற்றிக்கும் அவரே தலைவர் என்பது இதன் உட்பொருள் சக்தியோடு கூடிய பிள்ளையார் வடிவங்கள் ஐந்தாகும். உச்சிட்ட கணபதி, மகாகணபதி, ஊர்த்துவ கணபதி, பிங்கள கணபதி இலட்சுமி கணபதி என்பனவைகளே அவை.

நாட்டியங்களைத் தொடங்குவதற்கு முன் விநாயகப்பெருமான் முதலில் வணங்கப் பட வேண்டியவரென்றும் அவரே மகாக்கிரமணி என்றும் தமது நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் குறிப்பிடுகின்றார். (17)

விநாயகருக்குரிய வழிபாட்டில் சுக்கிர வாரம், மாதந்தோறும் வரும் சதுர்த்தி விரதம், ஆவணி மாத விநாயகர் சதுர்த்தி விசேடமானவை. விநாயகர் ஆலயங்களில் இத்தினங்களில் அபிஷேகம் ஆராதனை, திருவுலா போன்றவை நிகழும். விநாயக ஷஷ்டி விரதமும் மிகவும் சிறப்புடையது. ஷஷ்டி விநாயகரையும், கந்தனையும் தியானஞ் செய்யும் நாளாகும். ஐப்பசி மாதத்தில் வருவது கந்த ஷஷ்டியாகும். திருகார்த்திகைக்கு மறுநாட் தொடங்கி இருபத்தொரு நாட்கள் கழிந்து வரும் ஷஷ்டியும், சதய நட்சத்திரமும் கூடிய தினத்தன்று, விநாயகரை வழிபடும் விரதம் 'விநாயக ஷஷ்டி' விரதம் என்றுங் கூறப்படும். இக்காலங்களில் கோயில்களில் விநாயகருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் விநாயகர் அவதாரஞ் செய்த கதை படிப்பதும் இருபத்தோராவது நாள் கஜமுகாசுர சம்ஹாரம் நடைபெறுதலும் மறுநாள் இரவு குருட்டுப்பாம்பான விஷ்ணுவினது சாபவிமோசனம் அளித்தலுமாகிய கிரியைகள் நடைபெறும். விநாயக ஷஷ்டி விரதத்தை அனுட்டிப்பதனால் குருட்டுத்தன்மை, செவிட்டுத்தன்மை, சந்ததியின்மை குடும்பச்சச்சரவு, நோய் யாவும் நீங்கிச் சுகம் பெறுவர். (18)

கோயில்களில் நைமித்தியக் கிரியைகள் நிகழ்வதற்குப் பூர்வாங்கமாக இடையூறு எதுவுமின்றி எடுத்த காரியம் நிறைவேற அருள்புரிய வேண்டி நிகழ்த்தப்படும் கணபதி ஹோமமும் குறிப்பிடத்தக்கது. இதில் கணபதியை அக்கினிவடிவில் எழுந்தருளுவித்து ஹோம குண்டத்தில் உரிய அவிர்ப்பாகங்கள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மோதகம், அவல், அரிசிமா, கரும்பு, வில்வம், அறுகு, வாழைப்பழம், தேங்காய் போன்றவை விநாயகருகுகந்த பொருட்கள் வழங்கப்படுவது சிறப்பம்சமாகும். அத்துடன் யானை ஒன்றுக்கு உரிய உபசாரங்கள் வழங்கி விநாயகராக ஆவாகனஞ் செய்து பூசை செய்து வழிபடுவது நிகழ்வதுண்டு. விநாயகருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தி தேங்காய்கள் உடைத்து வழிபடுவது இடம்பெறும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான ஆலயங்களில் பஞ்சமுக விநாயகர் வழிபாடு சிறப்பாக இடம் பெறுகின்றது. விநாயகப் பெருமானுக்கும் இறைவனுக்குரிய திருமுகங்கள் போல ஐந்து திருமுகங்கள் உள்ளன.பஞ்சமுகார்ச்சனை சிறப்பாக நிகழ்வதுண்டு

விநாயகருக்குரிய காயத்திரி மந்திரம் சிறப்புடையது. கணேச பஞ்சரத்தினம், விநாயகருக்குரிய சகஸ்ர நாமம் போன்றவை வழிபாட்டுக்குரியவை. வேழமுகம், விநாயகர் அஷ்டகம், விநாயக கவசம், விநாயகர் அகவல், விநாயகர் அனுபூதி போன்றவையும் விநாயகர் வழிபாட்டுக்குரிய சிறந்த தோத்திரங்களாகும். சோழர் காலத்தில் மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவை, திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை, போன்ற இலக்கியங்கள் விநாயகருடைய மகிமைகளைக் கூறுவனவாக அமைவதோடு இக்காலத்தில் விநாயகர் வழிபாடு சிறப்புற்றிருந்ததையும் அறிய உதவுகின்றன. (19)

பாரதியாரின் ''விநாயகர் நான் மணிமாலை'' விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டிப் போற்றும் சிறப்புடைய செஞ்சொற் பாமாலையாகும். விநாயகர் மகிமையை அது எடுத்துக்கூறும். விநாயகரிடம் எத்தகைய வேண்டுதல்கள் செய்ய வேண்டும் என்பதனை பின்வரும் அடிகள் விளக்குவனவாக உள்ளன.

''தன்னை யாளும் சமர்த்தெனக் கருள்வாய்
தனைத்தான் ஆளும் தன்மை நான் பெற்றிடில்
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்;
ஒளி பெற்றுக்
கல்வி பல தேர்ந்து, கடமையெல்லாம் நன்றாற்றித்
தொல்வினைக் கட்டு எல்லாம் துறந்து இங்குப்
பழியற்று வாழ்ந்திடக் கண் பார்ப்பாய்!'' (20)

இவ்வாறு காலந்தோறும் மகிமை பொருந்திய விநாயகர் வழிபாடு முதன்மை வழிபாடாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. தெய்விகப் பொழிவு மிக்க விநாயகர் பெருமானுக்கு ஊர் தோறும் கோயில்கள் அமைத்து வழிபாடியற்றி அவரது திருவருளுக்குப் பாத்திரராவோமாக!

நன்றி: கும்பாபிஷேக மலர்

# அடிக் குறிப்புகள்

1. நடராஜசிவம், சகலஸித்தி விநாயகர் தர்மதா பதிப்பகம், சென்னை, 1981 பக். 23.
2. கோபாலகிருஷ்ணன், ப., காட்டுத்தறை பிள்ளையார் கோவில் திருத்தல வரலாறு, வண்ணார்பண்ணை, 1988, பக். 23.
3. திருநாவுக்கரசர் தேவாரம், திருவதிகை வீரட்டானம், 4 : 5.
4. மேற்படி. திருத்தாண்டகம், திருவீழிமிழலை 6 : 4.
5. ஏகாம்பரநாதன், ஏ. கோயிலும் இறை வழிபாடும் கழக வெளியீடு, சென்னை. 1986, பக். 3.
6. தங்கவேலு, கோ. இந்தியக் கலை வரலாறு (முதல் புத்தகம்) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976, பக். 135.
7. மேற்படி, பக், 148.
8. Ratna Ma Navaratnam, Aum Ganesa, Vidya Bhavan, Jaffna. 1978. P. 193.
9. Ibid, P. 192,
10. Ibid, P, 193,
11. மகாதேவன், டி. எம். பி. இந்துசமயத் தத்துவம் தமிழ் வெளியீட்டுக் கழகம் சென்னை, 1964, பக். 170.
12. Ratna Ma Navaratnam, Aum Ganesa, P. 192.
13. இந்திரபாலா, கா. "ஆதி இலங்கையில் இந்துமதம்" ஐயரத்தினம் உருவச்சிலை சிறப்பு விழா சிறப்பு மலர், மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை. 1978, பக். 19 — 20
14. ஏ. ஏகாம்பரநாதன் ஏ. கோயிலும் இறைவழிபாடும், பக். 3 — 6
15. மேற்படி, பக். 7
16. நடராஜசிவம், சகலஸித்தி விநாயகர், பக். 21 — 22
17. பாலசுந்தரக்குருக்கள். கு. விநாயகர் சுவரூபம், நவாலியூர்ச் சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேக மலர் 1971 பக். 5.
18. சுப்பிரமணியன், கி. நியாயசிரோன்மணி, மேற்படி கும்பாபிஷேக மலர் பக். 42 - 45
19. ஏகாம்பரநாதன், ஏ. விநாயகர் வழி பாடு, பக். 5.
20. புலியூர்க்கேசிகன், சௌபாக்கியத்துக்கு விநாயகர் வேலவர் வழிபாட்டு முறைகள், மாருதி பதிப்பகம், சென்னை, 1983, பக். 43 — 44

★ மங்கையர்களுக்கேற்ற சேலைகள்
★ பட்டுத்துணிகள்
★ பிளவ்ஸ் துணிவகை
மலிவாகக் கிடைக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

**RAVI AND RAJ SILKS**

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**

77, Grand Bagaar, JAFFNA.

உங்கள் முகத்திற்கேற்ற
கண்ணாடி தேவைகளுக்கு
எப்போதும் நாடவேண்டிய
இடம்

**எரிக் கணேஷ்**

566, ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம்.

பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள்
அப்பியாசக் கொப்பிகள்
எம்மிடம்
மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

**தனலெட்சுமி புத்தகசாலை**

கலாசாலை வீதி, திருநெல்வேலி.

ஆலயங்களுக்கு தேவையான
திருவாசி மணி தீபங்கள்
குத்துவிளக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் போன்ற
பொருட்கள் மலிவாகப் பெற்றிட
விஜயம் செய்யுங்கள்

**சிவன் மாளிகை லிமிட்டெட்**

166, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

மகோற்சவ மலருக்கு

எமது வாழ்த்துக்கள்.

உருளைக்கிழங்கு இறக்குமதியாளர்களும்

ஏக விநியோகஸ்தர்களும்

# ஆ. சின்னத்துரை

செல்லையா அவென்யு அம்மன் வீதி,

திருநெல்வேலி.

(திருநெல்வேலி பொதுச்சந்தை)

சுவைப்பிரியர்களின் நண்பன்
கண்ணன் லொட்ஜ்
சுவையான காலை, மதிய, மாலை உணவுகளுக்குத்
தவறாது நாடவேண்டிய உணவகம்

கண்ணன் லொட்ஜ்
வளாகச் சந்தி, திருநெல்வேலி.

பலசரக்குப் பொருட்கள்
மலிவாக வாங்க வேண்டுமா!
இன்றே விஜயம் செய்யுங்கள்
ரூபன் களஞ்சியம்
திருநெல்வேலி (சந்தை உட்புறம்)

விதம்விதமான உள்ளூர் வெளியூர் சீத்தைத் துணிகளுக்கும்
மற்றும்
சிறுவர், சிறுமியர்களுக்குத் தேவையான
றெடிமேட் ஆடைகளுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்
லைடன் புடவையகம்
ஆஸ்பத்திரி வீதி, பஸ்நிலைய முன்பாக யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான
- கட்டிடப் பொருட்களுக்கும்
- பெயின்ற் வகைகளுக்கும்
- இரும்புச் சாமான்களுக்கும்

தவறாது விஜயம் செய்யவேண்டிய இடம்
கீதாவுக்கே!
கீதா
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

விஷ்ணு
கட்டிடப்பொருள் விற்பனை நிலையம்
ஆடியபாதம், வீதி, கல்வியங்காடு

இதோ நற்செய்தி!

இரவு பகல் சேவை

வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர்கள் நண்பர்களுடன்
தொலைபேசியில் குறைந்த கட்டணத்துடன் தொடர்புகொள்ள

DEVI COMMUNICATION SERVICE

தேவி தொலைத்தொடர்புச் சேவை

தேவி மில்

ஆடியாபாதம் வீதி, திருநெல்வேலி.

மகோற்சவ மலருக்கு வாழ்த்துக்கள்

நம்பிக்கை! நாணயம்!!

அசல் 22 கரட் தங்கப்பவுண் நகைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

ராதிகாஸ் நகை மாளிகை

இல 189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நகை உலகில் நதியா
புதுப்புது டிசைன்களில் உங்கள் எண்ணம்போல்
தங்கப்பவுண் நகைகளில்
தெரிவுசெய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்

நதியா நகை மாளிகை

இல 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கோடையில் ஒரு குளிர்தென்றல்
சுவையான ஐஸ்கிறீம் குளிர்பானங்கள்
மற்றும் வடை, றோல், லட்டுக்கள்
போன்ற சிற்றுண்டி வகைகளுக்கு

லிங்கன் கூல்பார்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மகோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்.

எம்மிடம்

பலசரக்குப் பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவாக

பெற்றுக்கொள்ளலாம்

# வேணி களஞ்சியம்

165, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

---

ஆலயங்களுக்கு தேவையான அபிஷேகச் சாமான்கள்

தென் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஊதுபத்திகள்

வாசனை திரவியங்கள்

அனைத்தும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# சிவசம்பு களஞ்சியம்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

---

உங்களுக்கு வேண்டிய காலணிகளை

குறைந்த விலையில் பெற்றிட

விஜயம் செய்யுங்கள்

YABL TRADES CENTER

# யாழ் காலணி விற்பனை நிலையம்

11, நவீனசந்தை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

- பாடசாலை புத்தகங்கள் உபகரணங்கள்
- தென்னிந்திய மாத வார சஞ்சிகைகள்
- தினசரிப் பத்திரிகைகள்

அனைத்தும் பெற்றிட

# பூபாலசிங்கம் புத்தகசாலை

பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி
## அருள்மிகு தலங்காவற் பிள்ளையார்
# கோயில் வரலாற்றுக் குறிப்புகள்
### — எஸ். திருச்செல்வம் —

ஈழவள நாட்டின் சிரம் போல் விளங்குவது யாழ்ப்பாணம். தமிழ்ப்பெருங்குடி மக்களின் தாயகமான தமிழ்நாட்டிலிருந்து வந்த யாழ் பாடியின் பாடலால் பெருமை பெற்றது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தின் சிகரம் போன்று துலங்குவது நல்லூர். ஈழத்தின் திருத்தலங்களில் ஒன்றாக, நல்லாரும், வல்லாரும் தினந்தோறும் வணங்கும் பெரும் தலங்களில் ஒன்றாக, பொலிந்து விளங்குவதும் நல்லூரே.

நல்லூரின் வடக்கே பெயர் பெற்றுத்துலங்கும் தலம் திருநெல்வேலி. பல நூற்றாண்டுகட்கு முன்னர் தமிழ்நாட்டின் திருநெல்வேலி என்ற இடத்திலிருந்து வந்தவர்கள் இங்கு குடியேறிய காரணத்தால், இவ்விடமும் திருநெல்வேலி என்ற காரணப் பெயரால் அழைக்கப்பட்டு வருவதாக பேச்சு வழக்கில் கூறப்பட்டு வருகிறது.

திரு+நல்+வேலி என்பதே காலக்கிரமத்தில் திருநெல்வேலி என்று அழைக்க ஆரம்பிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. "திரு" என்றால் அருள், செல்வம் என்று பொருள். "நல்" என்றால் நல்லவர்கள் என்றும், நல்ல தெய்வங்கள் என்றும், 'வேலி' என்றால் இடம், தலம் என்றும் பொருள்படும். அருளும் செல்வமும் வாரி வழங்கும் நல்ல பல தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் தலம் என்பதாலும், அருளும் செல்வமும் நிறைந்த நல்லவர்கள் வாழும் இடம் என்பதாலும், இத்தலம் திருநெல்வேலி என்று அழைக்கப் படலாயிற்று.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது சான்றோர் வாக்கு. முழத்துக்கு ஒரு கோயிலைக்கொண்ட புண்ணிய தலம் திருநெல்வேலி. இச்சிறு கிராமத்தின் எத்திசை பார்க்கினும் கோயில்களே. இத்தனை அருள் நிறைந்த இத்திருத் தலத்தையே காத்து, அருள்பாலிப்பவன் தலங்காவலான். இதனாலேயே இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானை "தலங்காவற் பிள்ளையார்" என்று பக்தர்கள் அழைத்து வருகின்றனர்.

தந்தை தாயாராகிய சிவனுக்கும், அம்மைக்கும், மூத்த மைந்தனாகிய விநாயகனுக்கும், அருகருகே அழகாகக் கோயில் கட்டி, விழாச் செய்து மகிழ்பவர்கள் திருநெல்வேலி மக்கள். இதனால் நல்ல தெய்வங்களின் அருளும், ஆசியும் பெற்றவர்கள் இங்கு வாழ்வதாலும் இத்தலம் திருநெல்வேலி என அழைக்கப்படுவது பொருத்தமானதே. இவ்வாறு எல்லா நலனுடனும், பலனுடனும் புகழ்பெற்ற திருநெல்வேலிப் பதியில் நடுநயமாக விளங்குவது தலங்காவற் பிள்ளையார் கோயில். இக்கோயிலின் வரலாறு தனித்துவமானது. தொன்மையானதுங்கூட. தலத்தையே காவல் செய்யும் விநாயகன் என்று பெயர் பூண்ட விநாயகன் என்றால் சொல்லவும் வேண்டுமா?

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, ஈழத்தின் பல பாகங்களிலுங் கூட பல நூற்றுக் கணக்கான விநாயகர் ஆலயங்கள் இருக்கின்றபோதிலும் இக்கோயிலின் அமைப்பு ஓர் தனித்துவத்தன்மை பெற்றது என்பதை இதனை அணுகி ஆராய்ந்தால் மட்டும் புரியும். நாரதர் ஆரம்பித்துவைத்த மாம்பழச் சண்டையின்போதும்கூட தந்தை தாயையே உலகம் என்று சுற்றிவந்து, மாம்பழம் பெற்று, அவர்கள் அருகிலேயே மூத்த பிள்ளையாகவும், செல்லப்பிள்ளையாகவும் அமர்ந்துகொண்டவனல்லவா விநாயகன்?

இங்கும் கூட, திருநெல்வேலி சிவன், முத்துமாரி அம்மன் ஆலயங்களுக்கருகிலேயே தனக்கும் கோயில் அமைத்து எழுந்தருளி தனது உரிமையை நிலைநாட்டி, திருநெல்வேலித் தலத்தையே ஆட்சிபுரிகின்றானே! தாயாராகிய உமை அம்மையின் உரிமைப் பிள்ளைதானே என்பதை நிலைநாட்ட, தன்னைச்சுற்றி அரசடி அம்மன், வாலை அம்மன் முத்துமாரி அம்மன் என்ற மூன்று ஆலயங்களை வட, கீழ், மேற்றிசைகளில் அமைத்து அவற்றின் நடுநாயகமாக நின்று திருநெல்வேலித் தலத்தையே காவல்செய்யும் தலங்காவலான் பெருமையை, அழகை, ஆட்சிச்சிறப்பை எவ்வாறு புகழ்வது? காணக்கண்ணாயிரம் மட்டும் இருந்தால் போதாது பல்லாயிரம் கண்கள் வேண்டுமே இந்த ஆனந்த அழகை அள்ளிப்பருக.

சிவனின் மூத்த குமாரர், விநாயகர். விநாயகர் என்றால் தனக்குமேல் ஒரு தலைவர் இல்லாதவர் என்பது பொருள். சிவனும் விநாயகரும் ஒருவரே. தேவர்களின் துயர்துடைக்க விநாயகன் பிரணவத்தினின்றும் தோன்றினர் என்பது வரலாறு. இவரது திருமேனி ஞானமயமானது. இடர்களைப் போக்குபவன. விக்கினங்களை நீக்குபவனாதலால், விநாயகன் முதலில் வழிபடுவதற்குரியவன் என்பது சமயாசாரியர், சந்தனாசாரியர்களது வாக்கு.

கயமுகாசுரனின் துன்பத்தால் வருந்திய தேவர்கள், திருக்கைலை மலைக்குச் சென்று தங்கள் துன்பத்தை நீக்கி அருளுமாறு சிவனை வேண்டினர். சிவன் பார்வதி சமேதரராய் நந்தவனத்துக்குச் சென்று, அங்குள்ள சித்திர மண்டபத்தில் எழுந்தருளி சித்திரங்களை நோக்கினார். சித்திரங்களில் ஒன்றாயிருந்த சிவசக்தி பிரணவம், சிவனது திருவருளால், ஆண்டவன் எழுத்தாகிய "அகரம்!" ஆண்யானையாகவும் அம்மை எழுத்தாகிய "உகரம்" பெண் யானையாகவும் காட்சியளிக்க, அங்கு யானை முகத்துடன் கூடிய விநாயகப்பெருமான் திரு அவதாரம் செய்தார்.

சிவனின் சிரேஷ்ட புதல்வனான விநாயகன், திருநெல்வேலி தலங்காவலில் குடி கொண்டிருக்கும் வரலாறு பழமையானது! தொன்மையானது. இங்கு கோயில் கொண்டிருக்கும் நிலத்தை ஐந்து, ஆறு தலைமுறைகளுக்கு முன்னர் பூசகர் ஒருவர் தாமே பணம் கொடுத்து வாங்கி, சிறு கோயில் கட்டி பிள்ளையாரை தினமும் அர்ச்சித்து வந்தார் ஆதியில் இங்கு கோயில் கொண்டருளிய பிள்ளையாரை மக்கள் சிலை வடிவிலே பூஜித்து வந்தனர். இச்சிலையை அடுத்து ஓர் அழிஞ்சில் மரம் இருந்தமையால், அடியார்கள் அழிஞ்சிலடிப் பிள்ளையார் என்று இம் மூர்த்தியைப் போற்றி வழிபட்டுவந்தனர்.

இவ்வாலயத்தை, யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் இராசாக்கள் (மன்னர்கள்) நன்கு ஆதரித்து வந்ததாக வரலாறு கூறுகின்றது. காலக்கிரமத்தில் யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகரன் என்னும் மன்னர் நல்லூரைத் தனது ராஜதானியாக அமைத்து ஆட்சி நடாத்திவந்தபோது தனது வழிபாட்டுக்காக நல்லைநாத சுவாமி கோயிலை ஜமுனாரிக்கு அருகில் அமைத்தான் இக்கோயில் இப்போது நல்லூர் சட்டநாதர் சுவாமி கோயிலில் என அழைக்கப்படுகிறது.

பரராஜசேகரன் தனது குலதெய்வமான நல்லைநாத சுவாமிக்கு காவற்தெய்வங்களாக நான்கு திசைகளிலும் நான்கு பிள்ளையார் கோயில்களை அமைத்தான். தலங்காவற்பிள்ளையார் கைலாச பிள்ளையார். வெயில் விழுந்த பிள்ளையார் பரராஜசேகரப் பிள்ளையார் ஆகியவை இவை நான்குமாகும்.

தலங்காவற் பிள்ளையார் கோயிலின் தெற்கே காயாரோகணசிவன் என அழைக்கப்படும் திருநெல்வேலிச் சிவன் கோயிலும், கிழக்கே காயாரோகண பூதராயர் கோயிலும் இருக்கின்றன. இதனால் தலங்காவற்பிள்ளையார் ஒரு காலத்தில் காயாரோகண

மூத்த நயினார் கோயில் (சிவனின் மூத்த குமாரன்) என அழைக்கப்பட்டதாக வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன. காலக்கிரமத்தில் திருநெல்வேலி என்னும் இப்பதியை இங்கு எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் காவல்புரிந்து வருவதால் தலங்காவற் பிள்ளையார் என்று அழைக்கப்படலாயினர்.

முற்காலத்தில் இவ்வாலயம் கிழக்கிலும் மேற்கிலும் வாசல் உள்ளதாக இருந்தது பிள்ளையார் அடியார்களின் கனவில் காட்சி கொடுத்தருளி, கிழக்கு வாசலை மூடி மேற்கு வாசலை மாத்திரம் பாவிக்குமாறு கட்டளையிட்டதற்கிணங்கவே கிழக்கு வாசல் மூடப்பட்டு, மேற்கு வாசல் உபயோகிக்கப்பட்டது. இன்றும், மேற்கு வாசலுடனேயே கோபுரம் அமைந்துள்ளது. ஒருபுறத்தே மணிக்கோபுரமும், மறுபுறத்தே அன்னதான மண்டபமுமாக ஆலய வாசல் திகழ்கிறது. ஆலயத்தின் முகப்புக்கோபுரம் சுமார் நூற்றி ஆறு வருடத்தொன்மையானது. (இவ்வாலயத்தின் 1840-ஆம் ஆண்டுச் சாசனத்திலிருந்து சில குறிப்புகள் எடுக்கப்பட்டன.)

ஒவ்வொருவருடமும் ஆனி மாதத்துச் சதயநட்சத்திரத்திலன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்வண்ணம் அதற்குப் பதினைந்து தினங்களுக்கு முன்னர் கொடியேற்றம் நடைபெறும். ஆரம்பத்தில் பத்துத் தினங்களுக்கு மட்டுமே திருவிழா நடைபெற்றது. 1973-ஆம் ஆண்டு முதல் அடியார்களின் வேண்டுதலுக்கிணங்க திருவிழாக்களின் தொகை பதினைந்தாக அதிகரிக்கப்பட்டது. திருவிழாக்களின்போது வசந்தமண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் பிள்ளையார் உள்வீதியும், வெளிவீதியும் உலாவருவார். அநேகமான திருவிழாக்களின் போதும் சுவாமியை வாகனத்தில் ஏற்றி, குடை, கொடி, ஆலவட்டம் தீப்பந்தம் ஆகியவை ஏந்தியவண்ணம் அடியார்கள் தங்கள் தோளில் சுமந்து வீதி உலா வருவது முக்கிய அம்சமாகும். சுவாமி வெளிவீதி வரும்போது பல அடியார்கள் வீட்டு வாசலிலும் மண்டகப்படி வைத்து, பூசையும் நிவேதனமும் செய்யப்படும். வருடாந்தம் நடைபெறும் பதினைந்து திருவிழாக்களிலும் ஏழாம் நாளன்று இரவு தண்டிகை உற்சவமும், பத்தாம்நாளன்று சப்பற மஞ்ச உற்சவமும் பதின்மூன்றாம் நாளன்று இரவு சப்பற உற்சவமும், பதினான்காம் நாளன்று மாலை ரத உற்சவமும் பதினைந்தாம் நாளன்று தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

இக்கோயிலுக்கான தேர் அடியார்களின் உதவியுன் 1942-ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. இறையடி எய்திய நாகலிங்க ஆச்சாரியார் அவர்களின் கைவண்ணத்தில் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் உருவான செயற்தேர். இவ்வாலயத்திற்கு மேலும் கெம்பீரத்தைக் கொடுக்கின்றது. இத்தேரின் வெள்ளோட்டம் .இன்றைக்குச் சரியாக நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் (17-6-1942) நடைபெற்றது.

தேர்த்திருவிழாவன்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்குதலும், தேர் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, ஆலயவாசலுக்கு வரும்போது சிதறு தேங்காய் அடித்தலும் இன்றும் நடைபெற்று வருகின்றது. தேர்வெள்ளோட்டம் நடைபெற்றதற்கும் ஆலய வாசலில் இருக்கும் கிணற்றுக்கும்கூட ஒற்றுமையுண்டு இக்கிணற்றுநீர் உவர்ப்பாகவே என்றும் இருந்தது. இதனால் அடியார்கள் இந்நீரை கை, கால் அலம்பவும், நிவேதனப் பொருட்களை சுத்தம் செய்யவும் மட்டுமே பாவித்து வந்தனர். ஆனால் வெள்ளோட்டம் நடைபெற்ற நாளிலிருந்து இக்கிணற்று நீர், உவர்த்தன்மை நீங்கி தேவ அமிர்தம் போன்று மாறியது இன்றும் கோயிலை அண்மித்து இருக்கும் கிணறுகளில் நீர் உவர்ப்பாக இருக்க இக்கிணற்றின் நீர் மட்டுமே தனிச்சுவை நிரம்பியதாகவுள்ளதால், இதனையே பல அடியார்கள் தம் வீட்டுப்பாவனைக்கு எடுத்துச் செல்கின்றனர்.

கோவிலின் தெற்கு மூலையில் அரச மரத்தின் கீழுள்ள வைரவர் விக்ரகத்திற்கு அருகில் 1958-ம் ஆண்டளவில் தீர்த்தக்கிணறும், தீர்த்த மண்டபமும் கட்டப்பட்டது. வருடந்தோறும் ஆனி மாதத்து சதய நட்சத்திரத்தன்று பிள்ளையாரும் அவரது அருட் தம்பியான சுப்பிரமணியரும் இங்கு தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள்புரிந்து வருகின் றனர்.

கோயிலின் உள்வீதியில் இரண்டு கிணறுகள் உள்ளன. ஒன்று மூலஸ்தானத்திற்கு அருகிலும், மற்றது சனீஸ்வரன் கோயிலுக்கு அருகிலும் உள்ளது. சனீஸ்வரன் ஆலயம் 1968-ம் ஆண்டில் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஆண்டுதோறும் இங்கு நூற்றியெட்டுச் சங்குவைத்து சங்காபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

கோயிலின் மகாகும்பாபிஷேகம் பற்றியும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது. கோயில் பிரதம அர்ச்சகர் பிரம்மஸ்ரீ நா. சண்முகரத்தினக் குருக்கள் கும்பாபிஷேகம் நடைபெறவில்லையே என்று வேதனை வயப்பட்டு எண்ணிக்கொண்டிருக்கையில் பிள்ளை யாரே அவர் கனவில் 1968ம் ஆண்டு தை மாதம் தோன்றி பாலஸ்தாபனத்தைச் செய்யுமாறு கட்டளை இட்டதைத் தொடர்ந்து அதே வருடம் பங்குனி மாதம் பாலஸ் தாபனமும் வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகமும் அடியார்கள் ஆதரவுடன் நடைபெற் றன.

கோயில் மூலஸ்தான பிள்ளையார் விக்கிரகம் மேற்கு நோக்கியவாறு இருக்கிறது. சிறிய தெற்கு வாசலில் உற்சவ மூர்த்திகளான பிள்ளையாருடன் வள்ளி தெய்வானை சமேதரராய் சுப்பிரமணியரும் காட்சி தருகின்றனர். கோயில் உள்வீதியில் அர்ச்சனைக் கான பூ மரங்களுடன் யாகசாலை வாகனசாலை, மடப்பள்ளி ஆகியனவும் உள்ளன.

கோயிலின் திருப்பணி வேலைகளை அடியார்களே முன்னின்று நடத்தி வருகின்ற னர்' நிதி போதாது என்ற நிலை ஏற்படும் போதெல்லாம் தலங்காவலானே அடியார்கள் உள்ளத்தில் உட்புகுந்து நிதிகொடுத்து வருவதுபோல எந்தக் குறையுமின்றி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

ஒருநாள் பூசைசெய்து நிவேத்தியம் படைப்பதற்கு அர்ச்சகரிடம் அரிசி இல்லை. அரிசி வாங்கக் கையில் பணமும் இல்லை, இந்நிலையில் என்ன செய்யலாம் என்ற சிந்தனையில், பிள்ளையாரிடமே போய் முறையிடுவோம் என அர்ச்சகர் தமது வீட்டி லிருந்து புறப்பட ஆயத்தமாகியபோது, அடியார் ஒருவர் தமது காரில் ஒருமூடை அரிசியுடன் வந்தார் இதுவல்லோ தலங்காவலான் புதுமை! இதனையெண்ணி அர்ச்சகர் இன்றும் வியந்தவண்ணம் இருக்கிறார்.

கோயிலில் ஆண்டுதோறும் திருவெம்பாவை உற்சவம், மானம்பூ உற்சவம், விநா யகர் சதுர்த்தி உற்சவம் பெருங்கதைப்படிப்பு, கயமுகாசூர சங்காரம் ஆகியன வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ இராமலிங்கக் குருக்கள் பரம்பரையாக வந்த அர்ச்ச கர்கள் கிட்டத்தட்டக் கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக நித்திய நைமித்திய பூசைகள் செய்து வருகின்றனர். இவர்கள் வழிவழியாக உதித்த பிரம்மஸ்ரீ நா.சண்முகரத்தினக் குருக்கள் இப்போது பிரதம அர்ச்சகராக இருந்து பூஜைகள் செய்து வருகின்றார். இவரது மருமகர் முறையான பிரம்மஸ்ரீ சதாசிவ யோகீஸ்வர குருக்கள் வருடாந்த உற்சவத்தின்போது கொடி, ஏற்றி திருவிழாக்களை நடாத்தி வருகின்றார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசனால் ஆக்கப்பட்ட தலங்காவற் பிள்ளையார் "திருவூஞ்சல் நூல், 1979 கோயில் தேவஸ்தானத்தால் வெளியிடப்பட்டது.

(இக்கட்டுரை 1981-ம் ஆண்டு ஆலய தண்டிகை உற்சவத்தின்போது இலவச பிரசுரமாக வெளியிடப்பட்டது.)

உ

சிவமயம்

# சமூகமும் சமயமும்

— செல்வி பிருந்தகுமாரி இராமச்சந்திரன்

"சமயம் வேறு வாழ்க்கை வேறல்ல" சமயமே வாழ்க்கை. வாழ்க்கையே சமயம் என்பது இந்து சமயத்தின் நிலைப்பாடு.

இந்து சமயத்தில் உலகியல் வாழ்வும், சமய வாழ்வும் தனித்தனியே நோக்கப் பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளது. அதற்கு மாறாகச் சமயத்தின் சமூக வாழ்வை ஒதுக்கக்கூடாது. சமயமானது, சமூகத் தொண்டாகி மலரவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்திப் பணியாற்றிய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும்.

மனிதனுள் மறைந்து கிடக்கும் தெய்வீக சக்தியை வெளிப்படுத்துவது சமயமாகும். எமது இந்து சமயம் இவ் வையத்து மாந்தரை வாழ்வாங்கு வாழ நெறிப்படுத்து கின்றது.

யாவரும் நல்லொழுக்கம் உடையவராக மாற்றம் பெறும் அளவிற்கு, சமூகம் ஒழுக்க நிலையில் உயரவேண்டும். ஒழுக்கமான வாழ்க்கை வாழ்பவர்களே இறைவனை அடையமுடியும். இதனையே வள்ளுவர்,

" நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும் "

என்று எடுத்தியம்பியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற புருடார்த்தக் கோட்பாடு மனிதனின் படிநிலையான வாழ்க்கைத் தத்துவங்களை எடுத்துரைக்கின்றன. ஒருவர் அறநெறியில் நின்று கருமம் ஆற்ற வேண்டும். இதுவே ஆன்ம விடுதலைக்குரிய வழி என்று இந்து சமயம் கூறுகிறது.

அகமும், புறமும் தூய்மையாக விளங்கும் போதே வாழ்க்கை சிறக்கிறது. அதனால் எண்ணம், சொல், செயல் இம் மூன்றும் தூய்மை பெற்றிருத்தல் வேண்டும். "எமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது, இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம்" என்று ஆறுமுகநாவலர் அழகாகக் கூறியுள்ளார்.

எம்மை இறைவன் படைத்ததன் நோக்கம் பிறருக்கு நன்மை செய்யவே. நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலும் பிறருக்கு நன்மை பயப்பதாய் விளங்க வேண்டும். ஒரு சிறு செயல்கூடப் பிறருக்கும் தீங்கு விளைவிக்கக் கூடாது. எந்தவொரு பணி யிலும் சுயநலம் புகுந்துவிடல் ஆகாது.

பகவத்கீதையில் கிருஷ்ண பரமாத்மா அருச்சுனனுக்கு ஒரு சந்தர்ப்பத்தில் கூறுகிறார், 'கடமையைச் செய் பலனை. எதிர்பாராதே' இத்தகைய சிறந்த உபதே சத்தை இந்து சமயத்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைப் பிடித்தல் வேண்டும்.

நாம் வாழும் வாழ்க்கை நீரிற் குமிழி போல் நிலையில்லாதது. நிலையில்லாத இவ்வுடலைக் கருவியாகக் கொண்டு நிலையான அறங்களைச் செய்தல் அவசியம். மனிதரெல்லாம் மனிதரல்ல, வையத்துள் வாழ்வாங்கு வாழும் மனிதரே மனிதர் என்ற வகையில் மானுட நேயம் மனிதருள் மலிய வேண்டும். வேண்டாத சிந்தனைகளும், செயல்களும் மனிதரை விட்டு அகலவேண்டும். இதுவே தர்மம், தர்மத்தின் பாதை யிலே நாம் ஒவ்வொருவரும் வாழத் தலைப்படவேண்டும்.

எமது இந்து சமயம் அன்பு, பண்பு, நீதி, நேர்மை, செய்நன்றி மறவாமை, ஒழுக்கம், மன அடக்கம், உண்மை, தூய்மை, பஞ்சமா பாதகங்களையும் விலக்கல், பெரியோரைக் கனம் பண்ணுதல் போன்ற பல்வேறு அறப் பண்புகளை எமக்கு ஊட்டுகிறது. தர்மம் தலைகாக்கும் என்பது இந்து சமயத்தின் தாரக மந்திரம். இதனைத் திருமூலநாயனாரும்,

"யாவர்க்கு மாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவிற் கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க் கின்னுரை தானே"

என்று அறத்தின் முக்கியத்துவத்தினைச் சிறப்பாகக் கூறியுள்ளார். அறஞ் செய்வது அரிய செயலன்று, அது யாவற்கும் ஆவது, யாவற்கும் எளியது. அறஞ் செய்வதற்குக் காலம் வேண்டியதில்லை; இடம் வேண்டியதில்லை எல்லோரும் எப்போதும் எவ் இடத்திலும் அறம் செய்யலாம். இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டாவது வணங்குங்கள் எல்லார்க்கும் பால் கொடுக்கும் பசுவிற்கு சிறிதளவு பசும் புல்லாயினும் கொடுங்கள். சாதி மதம் பாராமல், பசியென்று வந்த எவருக்கும் நீங்கள் உண்ணும் போது ஒரு பிடி சோறாவது கொடுங்கள். பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவருக்கும் நன்மை யாகும். அது எல்லோர்க்கும் இயன்றதுதானே என்கிறார் திருமூலர்.

மனிதனுடைய நற்குணங்களில் தனி சிறந்து விளங்குவது பணிவுடைமையாகும். கல்வி, கேள்வி, செல்வம், பட்டம், பதவி முதலியன பல இருப்பினும் பணிவு என்ற ஒன்று இல்லையானால் அவன் உண்மையான மனிதனாக மதிக்கப்பட மாட்டான்.

இதனையே வள்ளுவரும்

"அரம் போலுங் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பிலா தவர்"

என்று கூறியுள்ளார்.

இந்த வகையில் இந்து சமயத்தவர்களாகிய நாம் அனைவரும் நன்மை செய்வதையே இலட்சியமாகக் கொள்ள வேண்டும். நன்மை செய்தே நலமாக வாழவேண்டும்.

மகோற்சவ மலர் சிறக்க வாழ்த்துக்கள்

# கவிலா பிக்ஸ பலஸ்

## KAVILA Picture Palace

குறைந்த செலவில் படங்கள் பிறேம் போட்டுத்தரப்படும்

297 / A, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி.

திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

மகோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

# ஸ்ரீ காளிகா சிற்பாலயம்

## SRI KALIKA SITPALAYAM

ஆலயங்களுக்குரிய,

தேர், மஞ்சம், வாகனங்கள் சிற்பசாஸ்த்திர முறைப்படி

● திறம்பட நிர்மாணித்துக் கொடுப்பவர்கள்.

பல பாராட்டுக்களையும் தங்க பதக்கங்களையும் பெற்ற

சிற்பாலயம்

ஸ்தபதி:
விஸ்வப் பிரம்ம ஸ்ரீ
செ. பாலச்சந்திரன் ஆச்சாரியார்

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

திருநெல்வேலி.

மகோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

மனங்கவர்ந்த டிசைன்களில்

**வண்ணப் பட்டுப் புடவைகள்**

அனைத்துக்கும் விஜயம் செய்ய வேண்டிய

புடவை மாளிகை

ஆஷிகா சில்க்ஸ்

# ஆஷிகா சில்க்ஸ்

இல. 4, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

# வினை தீர்க்கும் விநாயகர்

நாம் எந்த ஒருகாரியத்தைத் தொடங்கும் முன்பும் விநாயகரை வழிபடுகின்றோம் அவர் முழுமுதற் பரம்பொருள். நாம் தொடங்கும் சுபகாரியங்களுக்கு விக்கினங்கள் ஏற்படாது அனுக்கிரகித்துக் காப்பாற்றுவார்.

விநாயகர் பிரணவ ஸ்வரூபி. அவருடைய உருவம் ஓம் என்ற பிரணவ வடிவம். யானையின் முகமும், நீள்துதிக்கையும் "ஓம்" என்ற எழுத்தின் வடிவத்தைப் போல் அமைந்துள்ளன.

யானை விலங்கினுள் மிகப்பெரியது. மிகுந்த பலம் உடையது. மற்ற விலங்குகளிலும் பார்க்கப் புத்திக் கூர்மை உடையது. இப்படிப்பட்ட உயர்வானகுணங்களைப் பெற்றுள்ள யானையின் முகத்தைப் பெற்றிருப்பவர் கஜமுகனான கணேசர்.

விநாயகர் சிவபெருமானுக்கு மூத்தபிள்ளை. அவரை அன்போடும் பக்தியோடும் அழைப்பது எமது வழக்கம். அவர் ஏழை எளியவர்களுக்கெல்லாம் அருள்பாலிக்கும் தெய்வம். அவர் எல்லோருக்கும் நல்லவர், எல்லோருக்கும் வேண்டியவர், எல்லோருக்கும் சொந்தமானவர். அவரை வழிபட அதிக மந்திரங்களோ சாஸ்திரங்களோ தேவையில்லை. இதனால் எந்தப் பக்தனும் அவன் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து அருள் புரிவார். பசுவின் சாணத்திலும், மஞ்சள் பொடியிலும் பிள்ளையாரைப் பிடித்து வழிபடலாம். எங்கே எப்படி எதில் கூப்பிட்டாலும் எந்தக் களிமண்ணோ, கல்லோ அதற்குள் இருந்தும் அருள் புரிவார்.

பிள்ளையார் பல்வேறு இடங்களில் இருந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். அவரை உச்சிப் பிள்ளையார், குட்டிப் பிள்ளையார், வெள்ளைப் பிள்ளையார், பழங்கிணற்றடிப் பிள்ளையார், தலங்காவற் பிள்ளையார் என பல நாமங்களில் அடியார்கள் அன்போடும், பக்தியோடும் அழைப்பார்கள்.

ஐங்கரன் என்ற பெயர் கணபதிக்கு உண்டு. அங்குசம் தாங்கியுள்ள கரம் தீயவற்றை அழிக்கும் தன்மையை உடையது. அபயகரம் அண்டினவர்க்கு அருள் பாலிக்கிறது மோதகத்தைத் தாங்கியுள்ள கரம் சிறந்த ஞானத்தை தருவது. முக்திப்பேற்றை அருளும் கரமாகவும் இது விளங்குகிறது. பாசத்தை ஏந்தியுள்ள கரம்படைக்கும் தன்மையைப் பெற்றுள்ளது. துதிக்கை தேவர்களையும் மக்களையும் என்றென்றும் காக்கும் கரமாகத் திகழ்கிறது.

தெய்வத்திருமேனிகளிற் பருமனான சரீரம் கொண்ட கணபதி கருணையும், அருளும் கொண்டவர் மட்டும் இன்றி மாபெரும் சக்தியும் கொண்டவர். சிவபெருமான் விநாயகரின் தந்தையாய். இருப்பினும் தம்பிள்ளையை நினையாது திரிபுரசம்ஹாரத்துக்குப்புறப்பட்டுவிட்டார். என்ன நடந்தது? தேர் அச்சு முறிந்தது!

இதனை அருணகிரிநாதர்

> "முப்புர மெரிசெய்த அச்சிவ னுறை ரதம்
> அச்சது பொடிசெய்த் அதீரா"

எனக் குறிப்பிடுகிறார். மணிவாசகப்பெருமான்

> "தச்சுவிடுத்தலும் தாமடியிட்டலும்
> அச்சு முறிந்தது என்று உந்தீபற"

என்று பாடியுள்ளார்.

கணபதியின் கொம்புகளைப் பதிஞானம், பாசஞானம் என்று கூறுவதுண்டு. வலப் பக்கமாக உள்ள ஒடிந்த கொம்பு பாச ஞானத்தை குறிக்கின்றது. இந்தக் கொம்பிற்கு "ஞானதந்தம்" என்ற பெயரும் உண்டு. பாரதக் கதை எழுத துணையாக இருந்தது இந்தக் கொம்புதான். பாரதம் ஒரு பாச ஞான நூலாகும். இடது கொம்பு பதி ஞானம்.

விநாயகப் பெருமானின் சதுர்த்தியை முறையோடு கொண்டாடினால், நாம் அவரது அன்பையும், அருளையும் பெறலாம்.

வாரந்தோறும் வரும் வெள்ளிக்கிழமை விநாயகர் சதுர்த்தி, வளர்பிறைச் சதுர்த்தி ஆகிய மூன்றும் விநாயகருக்கு உரிய விரததினங்களாகும். மாதந்தோறும் பௌர்ணமியின் நான்காம் நாளான நான்காம் பிறையன்று விநாயகப் பெருமானை வழிபடுவோர் சங்கடம் நீங்கிய சந்தோசம் பெறுபவர் அதனால் தான் அந்த நாள் சங்கடஹர சதுர்த்தி என்று அழைக்கப்படுகிறது.

விநாயகப் பெருமானின் அருள்தான் எந்தக் காரியத்தையும் தடையின்றி நலமாக முடிக்க வல்லது. பூரண அனுக்கிரகம் செய்யும் குழந்தைத் தெய்வம். துன்பமின்றி வாழ நாம் அவரை துதிப்போமாக.

க. பசுபதி
உபதலைவர், சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம்.

## நற்சிந்தனை

அன்பு காட்டு
ஆனால் அடிமையாகிவிடாதே
இரக்கம் காட்டு
ஆனால் ஏமாந்து போகாதே
பணிவாய் இரு
ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு
ஆனால் கோபப்படாதே
சிக்கனமாய் இரு
ஆனால் கஞ்சனாய் இராதே
வீரனாய் இரு
ஆனால் போக்கிரியாய் இராதே
சுறுசுறுப்பாய் இரு
ஆனால் பதட்டப்படாதே
தர்மம் செய்
ஆனால் ஆண்டியாகி விடாதே
பொருளைத் தேடு
ஆனால் பேராசைப்படாதே
உழைப்பை நம்பு
ஆனால் கடவுளை மறவாதே

# திருத்தொண்டர் புராணம்

நாயன்மார்கள் வாழ்ந்த காலத்தில் கங்கநாடு சமணர்கள் நிறைந்த நாடாக இருந்தது. பல்லவர்க்கும், சங்கர்க்கு ஏற்பட்ட உறவு காரணமாகத் திகம்பர சமண முனிவர் தமிழ்நாடு முழுவதும் பரவிச் சமயப் பிரசாரம் செய்து வந்தனர். திருப்பாதிரிப் புலியூரிற் புகழ்பெற்ற சமணமடம் ஒன்று இருந்தது. நாட்டின் பல பகுதிகளில் சமணமடங்கள் இருந்து, பாலி, வடமொழி, தமிழ் இம் மூன்றிலும் சமய நூல்கள் பலவற்றை வெளியிட்டன. சமணக் குரத்திமார் மடங்களைத் தாபித்துப் பெண் உலகிற்குத் தொண்டு செய்து வந்தனர். இவ்வாறே பௌத்தமும் பரவியிருந்தது. எனினும் சமணமே மேனிலையுற்றிருந்தது.

கி. பி. 7ம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை சமணம் தமிழகத்தை ஆட்சி புரிந்ததென்று கூறல் தவறாகாது. பல்லவர் பாண்டியர் இந்தச் சமணத்தைப் பெரிதும் ஆதரித்து வந்தனர். அதன் பயனாகத் தமிழ்நாட்டுப் பழைய சமயமான சைவம் பேரளவு கவனிப்பாரற்றுக் கிடந்தது. இன்றைய காலகட்டத்திலும் "எம்மதமும் சம்மதமும்" என்று சொல்லித் திரிபவர்களால் சைவம், சைவராகப் போய்க்கொண்டிருப்பதைக் கவனிப்பார் எவருமில்லை. இக்காலத்தில் தான் திருத்தொண்டர் புராணத்தை திருமடங்களிலும், திருக்கோயில்களிலும், ஆற்றங் கரைகளிலும் இன்னும் புனிதமான இடங்களெங்கும் படித்துப் பயன்சொல்ல வேண்டிய காலம்.

மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணியாகிய பௌத்த சமண சமய நூல்களிற்குப் பிறகுதான் இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம் என்பன வடமொழியிலிருந்து தமிழ்மொழிக்குத் தரப்பட்டன.

சீவகசிந்தாமணியைப் படித்து ரசித்து வந்த சோழமகாராசன் திருத்தொண்டர் புராணத்தைப் பாடும்படி தன் முதன் மந்திரியாகிய அருண்மொழித்தேவரைக் கேட்டுள்ளான் என்பதனையும், அருண்மொழித்தேவர் திருத்தொண்டர் புராணத்தை பாடித் தில்லையில் அரங்கேற்றியதையும், சோழமகாராசன் அருண்மொழித்தேவருக்கு விருதுகள் வழங்கிச் சிவத்தியானத்தில் அமர்வதற்காக அவரை அரசியலில் இருந்து ஒய்வுபெறச் செய்ததையும் தெரிந்துகொண்டு, இத்திருத்தொண்டர் புராணம் 63 தனியடியார்களதும் 9 தொகையடியார்களதும் சரிதையை எடுத்துக் கூறும் தமிழ் மொழிப் புராணமாகும்.

ஆகமங்கள் : காரணம், காமிகம் முதல் வாதுளம் ஈறாகவுள்ள 28 என்று கூறினும், இந்தத் திருத்தொண்டர் புராணத்தைப் படிக்கும் பொழுது ஆகமங்கள் 72 ஆக இருக்கலாம் என்பதை உயர்த்துணர முடியும்.

இத்திருத்தொண்டர் புராணம் சுந்தரமூர்த்தி நாயனாரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு அவரைப் பற்றிய சரிதையை முதலிலும், நடுவிலும், ஈற்றிலும் நிறுவியிருப்பதை நோக்கலாம். இந்தத் திருத்தொண்டர் புராணம் திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகவும், திருத்தொண்டர் திருவந்தாதியை வழி நூலாகவும் கொண்டு பாடப்பெற்றும், சேக்கிழார் சுவாமிகளின் வித்துவத் தன்மையால் சிலவற்றை நீக்கியும், பலவற்றைப் புகுத்தியும் பாடியிருப்பதை அறிஞர் தேர்ந்து கொள்வர்.

இந்த 72 நாயன்மார்களது காலம் சுமார் கி. பி. 350 — கி. பி. 860 எனவும் இந்த நாயன்மார்களுள் திருவாதவூரரைப் பாடப் பெறாததால் அவர் பிந்தியவர் என்பதையும் உணர முடிகின்றது.

''உலகெலாம்'' எனத் தொடங்கி ''உலகெலாம்'' என நிறைவுபெறும். இந்தத் திருத்தொண்டர் புராணம் இறைவனோடு தொண்டருள்ளத்துள் ஒருங்க, தொண்டர் தம் பெருமையை சொல்லவும் பெரிதே என்று பெரியபுராணமாகத் திகழ்கிறது. உயர்ந்தது உலகில் எல்லாவற்றைக் காட்டிலும் பெரியது அடியார் பெருமையையே எது, இழிந்தது எதுவென்று கேட்பின் -

''ஈ என இரத்தல் இழிந்தன்று — அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனிலும் இழிந்தன்று
கொள் எனக் கொடுத்தல் உயர்ந் தன்று — அதன் எதிர்
கொள்ளேன் என்றல் அதனிலும் உயர்ந்தன்று.

[புறநானூறு]

இவ்வண்ணமாகப் பதினாறாயிரத்திற்கு மேற்பட்ட செய்யுட்களை உடைய இராமாயணம், பாரதம், கந்தபுராணம் என்னும் நூல்களுக்குப் பெரியபுராணம் என்று கூறாமல் சுமார் நாலாயிரம் பாடல்கள் கொண்ட திருத்தொண்டர் புராணத் திற்கே பெரியபுராணம் என்று பெயர் வந்தது.

திருவாரூரில் தொடங்கி, திருகொடித்தான் மலையில் நிறைவு பெற்றும், தில்லைவாழந்தணரில் தொடக்கி திருநீலகண்ட யாழ்ப்பாணரில் நிறைவுபெற்றும் 72 அடியார்கள் திறனும் சுமந்து வந்து

''மாற்றரிய பிறவியெனும் மறி கடலின்'' வாய்ப்பட்டு
போற்றரிய திருமலர்த்தாள் புணை பற்றிக் கிடந்தேற்குச்
சாற்றரிக முத்தியெனும் தடஸ்கரையில் உய்ப்பதற்கு

இந்தத் திருத்தொண்டர் புராணம் உதவும் என்பது முக்காலும் சத்தியம். இம்மண்ணுள்ளவும் அவை நமக்குப் புண்ணியம் கூட்டிப் பண்ணிய பாவம் போக்கி அருளும்.

''என்றும் இன்பம் பெருகும் இயைபினால்
ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடியாரவர் வான் புகழ்
நின்ற தெங்கு நிலவி உலகெலாம்''

சுபம்.

மு. ஆறுமுகம்

உ

# துயர்தீர்க்கும் தலங்காவலன்

வானெத டவியெது வரையெது கடலெது
வளியெது நிலமெது அனலெது புனலெது
ஊனெது உயிரெது உயிரது நிலையெது
உயிர்பெறு பயனெது உணர்வெது உயர்வெது
தானெது தனதெது தனதுறு துணையெது
தமர்பிற ரெனநினை வுறுநினை வெதுஎது
கோனெவன் குறைமன முடையவ னெவனெவன்
குறைநிறை யெவையெவை குணநிறை வெதுஎது
ஈனமு மெவையெவை இலரெவ ருளரெவர்
இரவெது பகலெது உறவெது பிறவெது
நானென தெனலெது நலமெது குலமெது
நண்ணி யோர்கிலார்க் குறுபய னெதுவெது
ஏனமு மன்னமு மிறங்கியும் பறந்தும்
எட்டி டாவதைத் தொடுவது மெதுஎது
ஞானமு ணர்த்திடு நெறியினை யறிவுற
நயந்த ருள்புரி வாய்கண நாதனே !

ஆற்றொணாத் தொல்லைக ளலைத்திடும் போழ்தினுன்
னாலயம் புக்கு நின்றே
ஆடியும் பாடியம் ஐயவெம் மெய்யவென்
றரற்றியும் அழுது தொழுவேன்
போற்றியும் புகழ்ந்தும் புதுப்புதுப் பாடல்கள்
புனைந்துயாம் பாடு மோசை
புத்துயி ரளித்திதய சுத்தியுஞ் செய்துனது
பொன்மனதை யீர்த்து நின்றே
காற்றிற் கரந்தெங்கு மோங்கார வெளியினைக்
கவியவிட் டெமையு மூடிக்
கண்திறக் காதபடி யுட்கண் திறந்துனைக்
காண்டிடச் செய்தி டாதோ
கூற்றுங் கொடும் விதியு மெங்கணிற் றோன்றியே
கோரம் விளைக்கு தையா
கொற்றவா நற்றவத் தலங்காவல் நாயகா
கோல மாமத வேழமே !

பொங்குமெழில் தங்குதிரு நெல்வேலி தன்னிலே
புனிதமொடு வீற்றி ருக்கும்
புகழ்கொள் தலங்காவல் பிள்ளையா ரேயுன்றன்
பொற்பாத நீழ லருளே
துங்கமிகு மோங்கார ரூபனே தத்துவா
தீதனே ஞான முதல்வா
துய்யபர மானந்த மெய்யசுப வாரியே
தூய்களிற் றின்மு கத்தோய்
பங்கப்ப டுத்துகொடு வினைசாடி யருளாடிப்
பாரித் தெமைய ணைப்பாய்
பகரரிய சித்திபுத் திகளெமக் கருளிடும்
பாலச் சந்திர மூர்த்தியே
அங்கமுறு கொடுபிணி யுபாதைகள் தீர்த்தெமக்
காறுத லளிப்பை யரசே
ஆங்கார வோங்கார ரீங்கார வைங்கரா
ஆனைமுக ஞான விபுவே !

தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்.

௨

# கணபதி பூஜை கைமேல் பலன்



'கணபதி பூசை கைமேல் பலன்' என்பது நாமறிந்த, நாம் அனுபவித்த உண்மை.

இந்துக்கள் சுபகாரியங்கள் செய்யுங்கால், தமது முயற்சிகள் தடையின்றி இடம்பெற வேண்டும் என்று வேண்டி விநாயகரை வழிபடுபவர். இராமபிரான் சேது அணைகட்ட ஆரம்பிக்கும் போது விநாயகரை வழிபட்டார் என்பர். விக்கினம் வாராமல் காத்து துயர் களைவதால் அவர் விக்கின விநாயகர்.

விநாயகப் பெருமானின் உருவமைப்பு கவர்ச்சியானது. இவ்வுருவ அமைப்பில் உயர்திணை, அஃறிணை இரண்டும் கலந்து காணப்படுகின்றன. ஆனைமுகம் அஃறிணையையும், ஐந்து திருக்கைகள் தேவரையும், உடல் மனிதர்களையும், கால்கள் பூதங்களையும் குறிக்கின்றன.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும், திருவைந்தெழுத்தையும் விநாயகர் குறிப்பதாக அருளாளர்கள் விளக்குவர். இதனால் விநாயகர் ஐந்து கரத்தன்.

வானவர் தேயத்துக் கற்பகதரு வேண்டியவற்றை எல்லாம் தருவது போன்று விநாயகப் பெருமானும் அடியவர்கள் வேண்ட முழுதும் தருவதால் அவர் கற்பக விநாயகர்.

சித்திகள் பலவற்றை விநாயகர் தருவார் என்பதால் அவர் சித்தி விநாயகர். ஆபத்துக் காலத்தில் எம்மை ஓடோடிவந்து காப்பவர். கணேசர் என்பதால் அவர் ஆபத்சகாய விநாயகர்.

நாம் சிந்தனையில் நினைப்பதை அவர் செயலாற்றுவதால் அவர் சிந்தாமணிப் பிள்ளையார்.

தமிழ் மக்களின் அரும் பெருஞ் செல்வம் உயிர்நாடியாம் தேவாரத் திருப்பதிகங்கள் சிதம்பரத்தில் புதையுண்டு கிடைத்தலை நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையார் மூலம் அறிந்தார். செதுக்கப்படாது. பொள்ளுதல் இன்றி உருவாகிய விநாயகர் என்பதால் அவர் – பொல்லாப் பிள்ளையார்.

வேதமருளிய வியாச பகவான் மகாபாரதத்தை நமக்கு அளித்தார். மகாபாரத சிந்தனைகள் உள்ளத்தே கருவுற்றதும் உலகுக்கு அளிக்கத் தகுந்த ஊடகம் ஒன்று வேண்டுமென்று வியாசர் இறைவனைத் தொழுது வேண்டினார்.

''இறைவா மானிட சமுதாய உயர்வு வேண்டி இலக்கியம் படைக்க விரும்புகிறேன் அதனை எழுதியெடுக்க யாரும் இல்லையே'' இப்படி வியாசர் கவலைப்பட்டார்.

''நற்குஞ்சரக் கன்றின் உதவியை நாடு. காரியஞ் சித்திக்கும்'' என்று கூறி இறைவன் மறைந்தனன், ஈற்றில் வியாசர் வேண்டியதற்கு விநாயகர் இசைந்தார்.

வியாசர் கூற மேருமலையே ஏடாகவும். தமது தந்தத்தை எழுத்தாணியாகவும் கொண்டு மகாபாரதத்தை விநாயகப் பெருமான் எழுதினார் இதனாலே அவர் – ஐவர் சீர் வரைந்த பிள்ளை.

## வழிபாட்டின் தோற்றம்

கி. பி· ஆறாம் நூற்றாண்டுக்கு மூற்பட்ட சங்க இலக்கியங்களில் பிள்ளையார் பற்றிய குறிப்புகள் இல்லை என்பதும், பிள்ளையார் வழிபாடு பற்றிய குறிப்பு தொல காப்பியத்தில் உண்டென்பதும் இலக்கிய ஆசிரியர்களின் துணிபாகும்.

கி. பி 680 - 668 ஆண்டுக் காலத்தில் நரசிம்மவர்மன் என்ற பல்லவன் சாளுக்கிய அரசர்களைப் போரிலே வென்று வாதாபி என்ற இடத்திலிருந்து பிள்ளையாரைக் கொண்டு வந்த பின்னரே விநாயகர் வழிபாடு தமிழ் நாட்டில் பரவியது என்பர்.

ஜனவரியை முதல் மாதமாகக் கொண்டு ஆண்டினைக் கணித்தனர் மேனாட்டினர் ஆவணித் திங்களை முதல் மாதமாகக் கருதி ஆண்டினைக் கணிக்கும் மரபு சுமார் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலவியது. அப்போது மலர்ந்ததுதான் பிள்ளையார் சதுர்த்தி வழிபாடு.

உரோமர்களுக்கு ஜேனஸ் எப்படியோ அப்படித்தான் இந்துக்களுக்கு கணேஷ் தெய்வம், செழிப்புக்கும், உணவுப்பயிர் அறுவடைக்கும் உரிய கடவுளாக ஜேனஸ் கருதப்பட்டார். அவ்வாறே நமக்கு கணேசப் பெருமான்.

இரு முகங்களையுடைய ஜேனஸ் வாயில் காப்புத் தெய்வமாக உரோமர்களால் கருதப்பட்டது, எந்தச் செயலையும் ஆரம்பிக்க முன்னர் ஜேனசை வழிபடுவது இத்தாலிய நாட்டு வழக்கம்.

அதேபோன்று நல்ல செயல்களை ஆரம்பிக்க முன்னர் விநாயகப் பெருமானை வழிபடுவது நமது வழக்கம்.

"யான்" "எனது" என்னும் செருக்கினை அழித்து, மன அமைதி தந்து செல்வச் சிறப்பினைத் தருவது விநாயகர் வழிபாடு. நேபாளம், திபெத் பர்மா, இந்தோசீனா, ஜப்பான், கிரேக்கம், மெக்சிக்கோ போன்ற நாடுகளிலும் விநாயகர் வழிபாடு பரவியுள்ளது.

அசோகப் பேரரசனின் புதல்வி சாருமதி நேபாளத்தில் விநாயகருக்குக் கோவில் கட்டி வழிபாடு செய்துள்ளதாக வரலாறு கூறுகிறது.

புத்தபிரான் தனது தலைமைச் சீடர் ஆனந்தருக்குக் கணபதி மந்திரத்தை உபதேசஞ் செய்து அருளினார் என்ற நம்பிக்கை இன்றும் நேபாள நாட்டில் நிலவி வருகிறது.

விநாயகருக்கோ பாரிய செவிகள், அவருக்கு ஏன் முறம் போன்ற செவிகள்? பிறவிப் பெருங்கடலில் உழலும் பக்தர் குழாம் கண்டு இரங்குகிறார் பிள்ளையார். பக்தர்கள் அவரது திருவடிகளை சிக்கெனப் பிடித்து இறைஞ்சுகிறார்கள். இவ்வடியார்களை முத்தி என்ற கரைசேர்க்க விழைகின்றார் பிள்ளையார். அதனால் தனது பெரிய செவிகளை அசைத்து காற்றை வீசி விரைவாக முத்திக்கரை அடைய வழி செய்கிறார், துணை நிற்கிறார்.

மாற்றரிய பிறவியெனும் மறிகடலின் வாய்ப்பட்டுப்
போற்றரிய திருமலர்த்தாள் புணைபற்றிக் கிடந்தேற்குச்
சாற்றரிய முத்தியெனுந் தடக்கரையில் உய்ப்பதற்கும்
காற்றெறியுந் தாழ்செவியர் கடாக்களிற்றைப் பணிகுதுமே !

நன்றி

மகாகும்பாபிஷேக வெளியீடு
அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார்
தேவஸ்தானம்

நீர்வேலி

மஹோற்சவ மலருக்கு வாழ்த்துக்கள்

மங்கையர்களின் மனம் கவர்ந்த புடவை மாளிகை

★ அஜந்தாஸ் ★

நவநாகரிக மங்கையர்களுக்கேற்ப புதிய டிசைன்களில்
நைலக்ஸ் சாறிகள், பிளவ்ஸ் துணிகள், ஆண்களுக்குரிய
ரவுசர் துணிகள் சேட் வகைகள் மலிவாக எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.

ஆலயங்களுக்கு தேவையான பட்டுக் குடைகள்,
பட்டுத் துண்டுகள் ஆகியன விற்கப்படும்

AJENTHAS TEXTILES

அஜந்தாஸ் புடவை மாளிகை

54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

கல்யாணப் பட்டுச் சேலைகளுக்கு ராசியான புடவை மாளிகை

★ ராசி சில்க்ஸ் ★

நவநாகரிக மங்கையர்களுக் கேற்ற புது புது டிசைன்களில்
நைலக்ஸ் சாறிகள், பிளவ்ஸ் துணிகள், சேட் வகைகள்
ரவுசர் துணிகள் அனைத்தும் மலிவாக பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.

ராசி சில்க்ஸ்

RASI SILKS

70 71 A நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

கிளை:

நல்லி சில்க்ஸ்
121 / 1 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

# பிள்ளையார் சுழி

எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், பிள்ளையார் சுழி போட்டு விட்டோ, அல்லது 'சுக்கலாம்பரதரம்' குட்டிக் கொண்டே தான் ஆரம்பிக்கிறோம். எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கிவிட்டுத்தான் அந்தத் தெய்வத்தை வணங்குவோம்.

பார்வதிக்கும் பரமசிவனுக்கும் விவாகம் நடக்கிறது. அப்பொழுது ரிஷிகள் முதலில் விநாயகர் பூஜை செய்யுங்கள் என்று சொல்ல பார்வதியும் பரமசிவனும் விநாயகர் பூஜை செய்கின்றனர்'' என்று கூறுகின்றார் துளசிதாசர்.

இது என்ன வேடிக்கை! பெற்றோர்களுக்கே இப்பொழுது தான் விவாகம் நடக்கிறது. அதற்குள் அவர்கள் மகன் விநாயகர் எங்கிருந்து வந்தார்? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் தத்துவம் என்னவென்றால்; பார்வதி, பரமசிவன், விநாயகர் மூவருமே அனாதி. ஏதோ ஒரு அவதாரத்தில் பார்வதி, பரமேசுவரன் வருகிறார்கள்

விநாயகர் என்றாலே தலைவர் இல்லாதவர், அதாவது எல்லோருக்கும் தலைவர் என்று பொருள். அவர் பிரணவத்தின் சொரூபமானதால் அப்படி அழைக்கப்பட்டார். விநாயகரை வணங்கினால் அவர் விக்கினங்களைத் தடுப்பார். வணங்காவிட்டால் விக்கினங்களைக் கொடுப்பார். இதில் அவர் பாரபட்சம் காட்டுவது கிடையாது.

திரிபுரத்தை எரிக்கச் சென்ற சிவன் விநாயகரை மறந்தார். அதனால் சிவனுடைய தேரின் அச்சு முறிந்தது. பிறகு அவர் விநாயகரை நினைத்த பிறகுதான் தேர் சரியாயிற்று.

அதே மாதிரி வள்ளியை மணம் புரியச் சென்ற முருகன் விநாயகரை மறந்தான் அதனால் அவனுடைய நோக்கம் நிறைவேறவில்லை. முருகன் கணபதியை வேண்டிக் கொண்ட பிறகுதான் அவனுடைய காரியம் கைகூடிற்று.

விநாயகருக்கு ஏன் முதல் பூஜை? யாருக்கு முதல் பூஜை செய்ய வேண்டும் என்கிற பிரச்சினையைத் தேவர்களால் தீர்க்க முடியவில்லை. அவர்கள் சிவனை யோசனை கேட்டார்கள்.

''எல்லோரும் உங்கள் வாகனங்களில் அமர்ந்து இந்தப் புவனத்தைச் சுற்றி வாருங்கள், யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கு முதல் பூஜை'' என்று சொன்னார் சிவன்.

எல்லாத் தேவர்களும் தங்கள் தங்கள் வாகனங்களில் கிளம்பினார்கள். ஆனால் மூஞ்சூறை வாகனமாகக் கொண்ட விநாயகர் என்ன செய்வார்? ஆகவே சிவனை வலம் வந்தார். சிவனுக்குள் அகில பிரபஞ்சமும் அடக்கம் என்பது அவருக்குத் தெரியும். தன் புத்தியைக் கொண்டு அவர் ஜெயித்தார்.

விநாயகரை எதற்காக வணங்கினாலும் வணங்காவிட்டாலும் ஐந்தாவது வேதம் என்று கருதப்படும் மகாபாரதத்தைத் தன் தந்தத்தை உடைத்து எழுதிக் கொடுத்தாரே அதற்காக அவரை வணங்க வேண்டும்.

"நான் சொல்லும் வேகத்துக்கு உம்மால் எழுதிட முடியுமா?'' என்று கேட்ட வியாசரை, நான் ''எழுதும் வேகத்துக்கு உம்மால் சொல்ல முடியுமா?'' என்று கேட்ட விநாயகரை நாம் என்றும் வணங்குவோமாக.

*நன்றி:* அருள் மிகு ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார்
தேவஸ்தான கும்பாபிஷேக மலர்

உ
சிவமயம்

# வாழ்த்துரை

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் தம்மை வழிபடும் அடியவரின் விக்கினங்களை போக்கும் பெருமான்.

தமிழர் தமது முதல் வாழிபாட்டுத் தெய்வமாக விநாயகரையே வழிபட்டு எத்தொழிலையும் தொடங்குகின்றனர். எந்த நூல்களிலும் பிள்ளையார் காப்பு முதலில் கூறப்படுகிறது வழக்கமும் மரபுமாக உள்ளது. மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவைவிட்டு அல்லது சுருக்கி மனம், வாக்கு, காயம், என்பவற்றினால் தலங்காவற் பிள்ளையாரை வணங்கி விரதம் அனுஷ்டித்தால் எல்லா நன்மைகளும் கிட்டும். எல்லா மக்களும் இன்பம் வேண்டியே வாழுகின்றனர். அவ் இன்பத்தை எவ்வாறு பெறுவதென்பதை நாம் நன்குணர்ந்து பிள்ளையாரை மனத்திலிருத்தி உள்ளம் உருகி வணங்குவதேயாகும்.

பிள்ளையாரைத் தப்பாமல் சார்ந்து வழிபடுபவருக்கு நல்வாக்கினையும், நன்மனதையும், சகல செல்வங்களையும் கொடுத்து வருவது கண்கூடு. இப்புவியிலே எமது பிறவிப் பிணி நீங்கவும், எண்ணிய கருமங்கள் எளிதில் முற்றுப் பெறவும் பிள்ளையாரை போற்றி வணங்கவேண்டும். விநாயக வழிபாட்டு நெறியை காணபத்திய நெறி என்பர். இந் நெறி இலங்கை, இந்தியா, திபெத், பர்மா, யாவா, இந்தோனேசியா, யப்பான், சீனா போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வந்ததுள்ளதற்கு ஆதாரங்கள் பலவுள்ளன. காணபத்திய நெறியை இந்துக்கள் மட்டுமன்றி சமணர், பௌத்தர்களும் பின்பற்றி வருகின்றனர்.

பிரணவம் தான் எல்லாவற்றுக்கும் முதல் பிரணவமாகிய ஓம் என்பதிலிருந்து தான் சகல பிரபஞ்சமும், ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபமே பிள்ளையார் அவரது ஆனைமுகம், வளைந்த தும்பிக்கை இவற்றை சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும். பிள்ளையார் சுழிபோட்டு எதனையும் எழுத தொடங்கும் நாம் இறுதிவரை விநாயகரை கைவிடமால் இறுகப்பற்றினால் அவரின் அருட்கடாட்சம் என்றும் எம்மை வினையினின்றும் நீக்கும். சிங்கள மக்களிடமும் கணதெய்யோ என்று பிள்ளையாரை வணங்கும் வழக்கம் உண்டு; பௌத்த ஆலயங்களிலும் பிள்ளையாருக்கு ஓர் இடம் உண்டெனில் அந்த விநாயகப் பெருமானின் பெருமையை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

தலங்காவற் பிள்ளையாரின் இந்த மகோற்சவ மலரை இறைபக்தரான திரு. எஸ்.என். இராமச்சந்திராவின் அயராத முயற்சியினால் இறைவனின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்திருக்கின்றார். நல்ல சிந்தனையாளரான அன்பரின் முயற்சி பாராட்டிற் குரியது; எல்லாம் வல்ல தலங்காவிற்பிள்ளையார் நல்லருள் பாலிக்க வாழ்த்துகிறோம்,

ஓம் சாந்தி

"அருள்நெறித்தொண்டர்"
சிவ. ஆறுமுகசாமி. J. P.
வட பிராந்திய இந்துப் பேரவை
அமைப்பாளர்.

உங்கள் மங்கள நிகழ்வுகளை சிறந்த முறையில்
கொம்பியூட்டர் டிஸ்க் உதவியுடன் வீடியோ படம் பிடித்திடவும்
அதி நவீன தொழிநுட்பக்கருவிகளின் (MIXING)
முறையில் கலர் புகைப்படங்கள் பிடித்திடவும்

# அரவிந்
# *ARAVINTH*

வீடியோ புகைப்படச் சேவை

*326, Navalar Road,*
*Anaipanthy*
*Jaffna.*

326, நாவலர் வீதி
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்

Telephone No: **021 - 2190**

கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், சிறுவர்களுக்கும்
வயோதிபர்களுக்கும் ஏற்றவகையில் சத்துணவாக

# அண்ணா ஜீவாகாரம்

## நீங்கள் எங்கும் பெற்றுக் கொள்ளலாம்

எமது கிளைகள்;

அண்ணா தொழிலகம்
இணுவில்

அண்ணா கோப்பிக்கடை
நவீனசந்தை
யாழ்ப்பாணம்

TEL: **070 - 212298**
அண்ணா கோப்பி
திருநெல்வேலி

TEL: **021 - 2199**
அண்ணா விவசாய பண்ணை
இணுவில்

மஹோற்சவ மலருக்கு வாழ்த்துக்கள்

உங்களுக்கு வேண்டிய பலசரக்கு சாமான்கள்
குழந்தைகளுக்கு வேண்டிய பால்மா வகைகள்
அப்பியாசக் கொப்பிகள் பாடசாலை உபகரணரங்கள்
மற்றும் அனைத்து பொருட்களும் எம்மிடம்
மலிவாக பெற்றிட இன்றே விஜயம் செய்யுங்கள்

எமது திருப்தியான சேவையை
உங்கள் நண்பர்களுக்கும் கூறுங்கள்

# செல்லத்துரை ஸ்ரோர்ஸ்

அரசடி அம்மன் வீதி
திருநெல்வேலி

ஆலயங்களுக்குரிய தேர் மஞ்சம் வாகனங்கள் சிற்பசாஸ்திர
முறைப்படி திறம்பட நிர்மாணித்துக் கொடுப்பவர்கள்
மக்களின் பாராட்டை பெற்ற சிற்பாலயம்



# விநாயகர் சிற்பாலயம்

தலங்காவற் பிள்ளையார் கோவிலடி
திருநெல்வேலி

சிற்பஜோதி
ஸ்பதி சு. இராசரத்தினம்

# சைவ சமயமே மெய்ச் சமயம்

இப் பூவுலகில் பிறந்த மக்களாகிய நாங்கள் அனைவரும் புண்ணியம் செய்த ஆன்மாக்கள் என்பதில் ஐயமில்லை நாம் சைவர்களாகப் பிறந்தோம் என்றால் அதை யிட்டு நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டியவர்கள். அதே நேரத்தில் மற் றைய எல்லா மதத்தினரையும் மதிக்கும் சிறந்த பண்பு, நேசிக்கும் பண்பு எம் சைவ மதத்தவர்கள் மத்தியில் நிரம்ப உண்டு. யான் சிறந்த சைவனாக வாழ் நாள் பூராக வாழ விரும்புகிறேன் என்பதில் மனத்தளப்பம் இருக்கக் கூடாது.

உலகிலே அதிக அகிம்சை, சத்தியம், தார்மீக சிந்தனைகள், கொள்கைகள் மீது மிக நம்பிக்கையும் அதில் வெற்றியையும் அற்புதத்தையும் கண்டு பலன் பெற்ற மக்கள் சைவமக்கள் என்பதில் ஐயமில்லை மேலைத்தேய நாடுகளில் வசிக்கும் பிற மதத்தவர் கள் தாமும் எமது மதத்தின் மீது நம்பிக்கையும் கொண்டு ஆராய்ச்சிகளிலும் ஈடு பாடு கொண்டு எமது பாரம்பரிய விழாக்களிலும் ஈடுபாடு கொண்டு எம்மிலும் பார்க்கப் பயபக்தியுடன் கலந்து கொள்கிறார்கள். இவற்றைப்பல தேசிய தினசரிச் செய்தித்தாள்கள் மூலம் அறிந்து கொண்டுள்ளோம். இதிலிருந்து நாம் சைவசமயமே மெய்ச் சமயம் என்பதை உணர்ந்து பெருமைப்பட வேண்டியவர்கள்.

தெய்வீக நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் எமக்கு இன்பப் பேற்றைத் தரும். "மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்" என்பது ஒரு முது மொழி சமய வழிபாட்டை எமக்கு ஆணித்தரமாக ஊட்டி வளர்க்க ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். சித்தர் சிவயோகசுவாமிகள், நயினைச் சித்தர் முத்துலிங்கச் சுவாமி அடிகளார் போன்ற பலர் எழுத்தில் எத்தனையோ நூல்களை எழுதித் தந்து விட்டு சமாதி நிலை அடைந்தார் கள் அவை எல்லாம் பொன் மொழிகள் என்பது மட்டுமல்ல எமக்குப் பெரும் பொக் கிஷங்கள் ஆகும். இது மட்டும் அல்ல, நாயன்மார்கள் வாழ்ந்து காட்டிய முறைகளும், அவர்களால் பாடப்பட்ட திருமுறைகளும் எங்களுக்கு கிடைக்கமுடியாத பொக்கிஷங் களாகும்.

இப் பிறவியில் நாங்கள் பொன்னைச் சேர்த்து வைத்து என்ன? பொருளைச் சேர்த்து வைத்தென்ன? அவற்றால் ஏதொரு பயனும் இல்லை அவை நிலையானதும் இல்லை. இறையருளைத் தேடி வைத்தவர்களுக்கு ஒரு குறையும் இல்லை. இன்னும் அவனருளை அதிகம் தேட முயற்சிப்பவர்க்கும் யாதொரு குறையும் இல்லை. நாங் கள் தேடி வைத்த செல்வம் எல்லாம் சற்றும் குறையாது முற்றும் முழுதுமாக எம் முடன் நிலைத்து இன்று எம்மிடம் பாதுகாப்பாக இருக்கின்றதா? இல்லவே இல்லை.

கண்ணீரையும் செந்நீரையும் கண்டு துவண்டு போய் இன்று வாழும் நாங்கள் இறைவன் சோதனையால் மனம் துவண்டு விடாது சிக்கென அவன் திருவடிகளை இறுகத் தழுவிப் பிடிப்போமானால் எமது துன்பம் துயரங்கள் எல்லாம் பஞ்செனப் பறந்து விடும் என்பதில் ஐயமில்லை. இன்றைய நிலையில் எம்மைத் தெய்வம் தான் காப்பாற்ற வேண்டும் என்பதில் ஐயமில்லை அதை நாம் முற்றாக நம்ப வேண்டும் "அவனருளாலே அவன்தாள் வணங்கி எமது சைவமத நம்பிக்கையில், நடைமுறையில் நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்தி வருவோமானால் 'அவனருள் கிடைக்கும்" காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இறையருளால் மிக விரைவில் நாட்டில் சாந்தி சமா தானம் நிலவப் பிரார்த்திப்போமாக. எம்மக்கள் கண்ணீரைத் துடைத்து வினைகள் எல்லாம் தீர்த்து வைக்கப்படும் எனும் நம்பிக்கையுடன் உண்மைச் சைவர்களாக வாழ்வோமாக.

திருவருள் மிகு தலங்காவல் விநாயகப் பெருமான் எல்லாமக்களுக்கும் சாந்தியை யும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் அருளப் பிரார்த்திப்போமாக.

ஆசிரியை செல்வி ச. தங்கப்பொன்

திருநெல்வேலி.

மஹோற்சவ மலருக்கு

எமது வாழ்த்துக்கள்

எல்லாம் வல்ல தலங்காவலன் திருவருள்

எட்டுத்திக்கும் கிடைக்கட்டும்.

# திரு. வ. இராசையா குடும்பம்.

கேணியடி, திருநெல்வேலி.

சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தயாரித்த

சைவ, மாமிச உணவுகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

## வெஸ்கோ உணவகத்திற்கு

காலையில் சுடச்சுட

/// வீச்சு றொட்டி

/// சுவையான குழல் பிட்டு

/// இடியப்பம் தோசை

உருளைக்கிழங்குக் கறியுடன் சேர்த்துச் சாப்பிட

# வெஸ்கோ உணவகம்

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி.

கிளை:

## நியு வெஸ்கோ கிறீம் கவுஸ்

( நல்லூர் ப.நோ.கூ. சங்க அருகாமை )

ஆடியாபாதம் வீதி, திருநெல்வேலி.

உ

சிவமயம்

## யாழ்ப்பாணம் - திருநெல்வேலித் தலங்காவற் பிள்ளையார்

# வணங்கற் பாக்கள்

( ச. தங்கமாமயிலோன். )

சீரிலங் காபுரி யாழ்நகரில்
    திருநெல் வேலித் தலங்காவற்
பேரிலங் கும்பிள்ளை யாரவராம்
    பெருந் திரு முறைதரு பெருமானைப்
பாரிலங் குஞ்சைவப் பரிமளமாய்ப்
    படையல் நெய்தேன் பாற்பொங்கல்
காரிலங் கறுகிள நீர் கரும்பாற்
    கருத்தொரு மிக்குங் கழல்பணிவாம். 1.

நித்திய தத்துவ நின்மலனே
    நிகரிற் கருணா நிதியவனே
சத்தியத் துள்ளொளிர் தத்துவனே
    சர்வா லயநிறை சதுர்த்தியனே
மத்தியத் தானத்து மறைக்கொழுந்தே
    மறவாச் சிந்தை மருக்கொழுந்தே
சித்திதந் தாளுஞ் சிவக்கொழுந்தே
    சிவநே சாவுனைத் தினந்தொழுவோம். 2.

எண்ணிடு மெண்ணங்க ளீடேற்றும்
    இறைசிவன் மகனா மிபமுகனே
பண்ணிய லுந்திருப் பதமுறைகள்
    பரவுறு கோல பாணியனே
திண்ணிய மனம்வளர் தீயெண்ணந்
    தினந்தடுத் தாளும் திருமகனே
நண்ணிடு மன்பர்கள் நல்லாறே
    நாளும் பொழுதும் நாம்பணிவோம். 3.

நாற்றிசைக் கணங்களின் நாயகனே
    நாமமெ லாம்வளர் நாவலனே
ஆற்றிசை யணிவளத் தானவவே
    ஆத்தி சூடி அமர்ந்தவனே
வீற்றிசை யெழுநல விண்ணவனே
    விண்ணவர்க் கெல்லாம் வித்தகனே
போற்றிசெய் கதிர்முடிப் புண்ணியனே
    பூவார் திருவடி போற்றிடுவோம். 4.

ஐங்கரத் தானை முகத்தவரே
ஐவாய் வழிசெய லறுப்பவரே
ஐங்கனை யானை அழித்தவரின்
ஐயா நமர்ந்த அழகோனே
ஐங்குர வர்க்குய ராறுதலாய்
ஐந்தரு நீழ லமர்ந்தவரே
ஐங்கலை தருஞ்சிவ னைம்முகத்தின்
ஐந்தாட் சரத்தா னைப்பணிவோம். 5.

குறைவற நிறைந்த கோலத்தனே
கூவிய குமரனுக் கோலத்தனே
மறைபயி லரிதிரு மருகோனே
மாதவர் போற்றும் மருந்தோனே
முறைமுறை தேவர்கள் தொழுவோனே
முசுஷிக வாஹனத் தெழுவோனே
நிறைவுறு தவம்வளர நிறையோனே
நீடிரு வடியிணை நினைவோமே. 6.

அன்னையுந் தந்தையு மானவரே
ஆரமு தாயின்ப மானவரே
பொன்னையும் பொருளையுந் தருபவரே
போற்றிசெய் வாரிடர் களைபவரே
நன்மையுந் திமையுந் நமக்களித்தே
நாடோ றும் வினை தீர்ப்பவரே
தொன்மையு முண்மையுந் தோற்றியவா
தூயா நின்னடி தொழுவோமே. 7.

எண்டிசைக் கணங்களு மேழ்புவியும்
ஏழிசை யுந்தொழு மேரம்பனே
கண்டிகைக் குங்கடுங் கானகத்துங்
காத்தரு ளுஞ்சுடர்க் கணபதியே
பண்டிசை வேதப் பரப்பமைந்த
பாவா ரின்னிசைப் பதத்தானே
தொண்டிசை வாரவர் தொண்டுகளிற்
தோன்றாத் துணையா னைத்தொழுவாம். 8.

எண்ணிலு மெழுத்திலு மிலங்கலிலா
ஏகாந்த தத்துவத் தொழுபவரே
கண்ணிலுங் கருத்திலுங் கனிந்தறமாங்
காவிய பாரதங் காத்தவரே
விண்ணிலும் மண்ணிலும் விளங்கொளியாய்
வேறக லாதுயிர் வெளிப்பவரே
பண்ணிலும் பதத்திலும் பரிமளமாம்
பார்ப்பதி பாலனைப் பரவிடுவோம். 9.

அன்பர்தஞ் சிந்தையி னகலானே.
ஆகமச் சதுர்த்தி யகலானே
இன்பமுந் துன்பமு மில்லானே
இருவா ரணமுகத் தெல்லானே
கன்மன முங்கனி கற்பகமே
கண்டா மணிசிற கற்றளியா
தண்ணருஞ் செம்பொற் றாளளிக்குந்
தலங்கா வற்பிள்ளை யார்பணிவோம். 10.

சுபம்.

ச. தங்கமாமயிலோன்

உ

## அருளுரை

மனமே! இடைவிடாமல் இறைவனையே நினைந்து போற்றி ஏற்றி வா 'எறும்பு ஊரக் கல்லுந் தேய்ந்து போகும்' என்ற பழமொழிப்படி மனமாகிய கல்லும் இடைவிடாத பிரார்த்தனையினால் கரைந்துபோகும். நல்ல எண்ணத்தையே சதா நினைப்பவனுடை உள்ளத்திலே நல்லவைகளே பதியும். அதனால் அவன் மக்களில் நல்லவனாகவும் கீர்த்தியுடையவனாகவும் வாழ்வான். இறைவனுடைய நாம ஜெபத்தை நாத் தழும்பேற ஜெபிக்க வேண்டும். பொய் சொல்லாதவனுடைய நாவினால் ஜெபிக்கப்படும் மந்திரங்கள் உடனடியாகச் சித்தியைக் கொடுக்கும். பொய்யனாக்குவதற்கு கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவை அசுர சக்திகளாகும். ஆனால் அவை மத்தியில் ஏமாந்து போகக்கூடாது. இறைவனையே கும்பிடு? நம்பு! துயரங்கள் அனைத்தும் நொடிப் பொழுதில் அகன்றுவிடும்.

கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி (சமாதான நீதிபதி)
தலைவர்:- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

# நும்மருள் வேண்டுவம்

வருமடி யார்க்கு வரமளித் தருளும்
வள்ளலே தலங் காவற் பதியிற்
பெருமகிழ் வோடு பெட்புற அமர்ந்து
பேணியே எமைப் புரக் கின்ற
அருமருந் தன்ன கணபதி உந்தன்
அடியினைத் தினம் தினம் தொழுவோர்
திருவருள் பெறவும் திசையெலாம் அன்பு
செழிக்கவும் வேண்டுவன் யானே.

கந்த புராணப் படிப்பு உன்பதியிற்
காலங்கள் தோறும் நிகழ
வந்தநல் லடியார் வாழ்வுபெற் றுய்ய
வரமளித் திடவென மகிழ்ந்து
இந்தநற் தலமாம் தலங்காவற் பதியில்
இனிதமர் கின்றநம் தேவே
நொந்தவர் மகிழ நோய்நொடி அகல
நும்மருள் வேண்டுவம் யாமே.——

இந்த யாழ்ப்பாண அரசினைக் காக்க
எனஎழுந் தருளி யீங்குவந்து
சொந்தமாம் திருநெல் வேலி நற்பதியைத்
துலங்கிடத் தலங்கா வலாகி
வந்தநற் கோவே தினம்தினம் உம்மை
வணங்கிடும் அடியவர்கள் கூட்டம்
நொந்து போகாது காத்திடல் தானே
நும்கடன் பிள்ளையா ரப்பா.

திருவுலா வீதி வருகின்ற வேளை
தெய்விக நின் உருங்கண்டு
உருகிடா உள்ளம் உள்ளதோ ஐயா
உயர்தலங் காவல் நற்பதியில்
பெருமகிழ் வுடனே உறைந் தினிதிருக்கும்
பிள்ளையாரே உன தடியார்
கருமங்கள் யாவும் களிப்பொ டொப்பேறக்
கருணைநீ பொழிந்திடல் வேண்டும்.

அந்தணர் அடியார் அனைவரும் இணைந்து
ஆண்டவா உன்திரு விழாவை
இந்தமா நிலமே உவந்திடும் வண்ணம்
இனிதுற நடாத்து கின்றார்கள்
சொந்தமாய் நல்ல தலங்காவற் பதியிற்
துலங்கிடும் விநாயகா விரைந்து
வந்தெமக் கருளும் வரங்களும் வழங்கி
வாழ்த்திட வேண்டுவம் யாமே.

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி

உ

சிவமயம்

# விநாயகர் விரதங்கள்

பண்டிகைகள் கொண்டாடுவதன் நோக்கம், நமக்கு இறைவனிடத்தில் பக்தி பிறக்க வேண்டும் என்பதே. பக்திதான் முத்திக்கு மார்க்கம். அதுமட்டுமல்லாமல் நாங்கள் இப்பிறவியில் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும்; நீண்ட நாட்கள் வாழ வேண்டும். நல்ல போகங்களை அனுபவிக்க வேண்டும். இறுதியில் மோட்சம் கிடைக்க வேண்டும் என்பதே.

பூசை வழிபாட்டில் ஈடுபாட்டையும் பரிமளிப்பையும் பெருக்குவதற்காக ஏற்பட்ட ஒருவகை நியமங்கள்தான் விரதம். சங்கற்பத்துடன் செய்கின்ற சமய காரியமும் மற்றும் புண்ணியச் செயல்களும் விரதம் ஆகும் என்று வடமொழி அகராதி கூறுகிறது. தாம் செய்யும் காரியமொன்றுக்கு மனம், வாக்கு, காயம் மூன்றையும் நேர் படுத்திக் கொள்ளுதல் சங்கற்பம் ஆகும். விரதம் என்ற கருத்து வாழ்க்கையில் பல்வேறு முறைகளில் நின்று மனிதரை நல்வழிப்படுத்தி வருகின்றது.

பொய் சொல்லாமை, வெகுளாமை, பிறர் பொருளை இச்சியாமை, ஐம்புல நுகர்ச்சிகளில் அளவு கடந்து செல்லாமை என்பன அனைவருக்கும் உரியன. இவையும் விரதங்களே. இவை உயர் விரதங்களுக்கு ஆரம்பம் ஆகும். தன் கணவனையன்றி பிற ஆடவரை ஒரு பொருட்டாகக் கருதாமையும் அதாவது பதிவிரதையாக இருத்தலும் விரதமே. இதேமாதிரி ஏக பத்தினியுடன் சீவிப்பதும் விரதம் இன்ப விசேட விரதம் ஆகும்.

வெறுமனே உணவை விடுத்து இருத்தல் உபவாசமன்று. அதுமட்டுமானால், அதற்குப் பெயர் பட்டினி இருத்தல். உணவை விட்டு இருத்தலோடு மனத்தூய்மையும் செம்மையும் மிகுவித்துச் சித்தத்தை சிவன்பால் செலுத்தி உடலாலும் உள்ளத்தாலும் அந்நிலையில் பிரியாதிருத்தலே உபவாசம்.

விரதம் இருப்பதினால் உடல் மாசு நீங்கும், சீரண உறுப்பு பலம்பெறும்; துர்நீர் மறையும்; இளமை நீடிக்கும் என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். விரதம் இருக்கும் பொழுது நாமாவழிகள், தேவார திருவாசகம் ஓதுதல், பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ளல், கூட்டு வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும் அல்லது தியானம் இருத்தல் வேண்டும். இதனால் குடலில் சீரண திரவங்கள் சுரந்து குடலை அரிக்கமாட்டாது.

விநாயகர் விரதங்களில் முக்கியமானவைகள் சில. விநாயகர் சதுர்த்தி, விநாயகர் சுக்கிரவாரம் (வைகாசி மாதச் சுக்கில பட்சத்து முதற் சுக்கிர வாரம் தொடக்கம் அனுஷ்டிக்கும் விரதம் ஆகும்). விநாயகர் சஷ்டி என்பன மிக முக்கிய விரதங்கள்

ஆகும். சிந்தூரனைக் கொல்லும் பொருட்டு விநாயகர் திருவவதாரம் செய்தருளிய தினம் ஆவணி மாதப் பூர்வ பக்கச் சதுர்த்தி தினமாகும். இத்தினமானது உலக காரணராகிய சிவபிரானை பூசித்த மகிமையும் கீர்த்தியும் வாய்ந்ததுமான நாளாகும்.

மாதந்தோறும் வருகின்ற பூர்வபட்ச சதுர்த்தி நாட்களும் விநாயகருக்குரிய விரத நாட்களே. சதுர்த்தி விரதம் எனப்படும். இந்நாட்களில் விரதம் இருப்பது மிக விசேஷமாகும். அவ்வாறு அனுட்டிக்க முடியாதவர்கள் விநாயகர் சதுர்த்தி எனப்படும் ஆவணி சதுர்த்தி நாளில் விரதமிருக்கலாம்.

விநாயகர் சஷ்டி விரதம் இது பெருங்கதை எனப்படும். கார்த்திகை மாதத்து கிருஷ்ணபக்கப் பிரதமை முதலாக மார்கழி மாதச் சஷ்டியிறுதியாகவுள்ள இருபத்தியொரு தினங்களும் அனுட்டிக்கப்படுவது. முன்னொரு காலத்தில் விஷ்ணு சிவபெருமானுக்காக பொய் சொன்னார். அதற்காக உமாதேவியார் குருட்டுப் பாம்பாக வேண்டும் என்று சபித்தார். அவர் உடனே பாம்பாய் ஒரு ஆலம் பொந்தினில் இருந்து தவம் செய்தார். விநாயகக் கடவுள் அச் சாபத்தை நீக்கி அருள் செய்தார். (பிள்ளையார் கதை) அச் சாபம் நீங்கிய தினம் மார்கழி மாதத்தில் வரும் பூர்வபக்கச் சட்டியாகும். இத்தினத்தில் மெய்யடியார்கள் பலர் விநாயகக் கடவுளைப் பூசித்துப் போக மோட்சங்களை அடைந்தார்கள். இருபத்து ஒரு வருடம் இவ்விரதம் அனுட்டித்தபின் உத்தியாபனம் செய்யலாம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது கைக்கொள்ளலாம்.

முதல் இருபது நாளும் மத்தியானம் மட்டும் போசனம் செய்யவேண்டும். இரவு பால், பழம் அல்லது பலகாரம் உட்கொள்ளலாம். தினமும் விநாயகர் புராணம், விநாயகர் கதை (பெருங்கதை), விநாயகர் அகவல், விநாயகர் கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்தல் வேண்டும். இறுதி நாள் விசேஷ பூசை வழிபாடுகள் செய்து உபவாசமிருந்து மறுநாள் பாரணை செய்யவேண்டும். விநாயகர் விரதங்களில் மிகச் சிறப்புடைய விரதம் இதுவாகும்.

நிவேதனமாக மிக விருப்பத்துடன் மோதகம், கொழுக்கட்டை, அப்பம், எள்ளுருண்டை, அவல்ப்பொரி, வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, விளாம்பழம், நாவற்பழம், பால், தேன், கிழங்கு வகை, இளநீர், வெற்றிலை, பாக்கு, தேங்காய், வெள்ளரிப்பழம், இட்லி, வடை, சுண்டல், பொரி உருண்டை, பாயாசம், கொய்யாப் பழம் என்பவற்றை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கின்றார்.

பிள்ளையாருக்கு பூசை செய்ய பூக்கள் பத்திரங்கள் முக்கியமானவை. மாவிலை, சங்கு, புஷ்ப இலை, மாதுளம் இலை, நாக இலை, அறுகம்புல், தங்க அரளி இலை, வன்னி, மந்தாரை, தும்பைப்பூ, அட்சதை என்பவற்றை மிக விருப்பத்துடன் ஏற்றுக் கொள்கிறார்.

விநாயகப் பெருமான் பூசையிலும் தமது அருட்தோற்றத்திலும் தம்மை மிக எளிமையாக்கிக் கொண்டு அவரை வழிபடும் பக்தர்கட்கு முழுமையாக பெருமளவு சுகபோகத்தையும் சௌகாரியத்தையும் வாரி வாரி வழங்குகின்றார்.

— பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மா

6-ம் ஒழுங்கை
பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி.

With Best Compliments
FROM

**CITY TELECOM AND COMPUTER SERVICE**

I. D. D. Calls, Local Calls, Fax.
E-mail, Word-processing Stencilling
'Overseas Connecting Service'
VAN FOR HIRE

11, Ramanathan Road Tel: 2104.2608
University View 2676
Jaffna Fax: 2104
E-MAIL citvmoasltnet.

❀ றெக்கோடிங்

❀ வீடியோ படம் பிடித்தல்

புத்தம் புதிய C. D. மூலம்
நேரடி ஒலிப்பதிவு

**ஸ்ரீ விநாயகர்**

வீடியோ, ஓடியோ,

றெக்கோடிங் சென்ரர்

2-ம் மாடி, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

நவநாகரீக மங்கையர்களின்
மனம் கவர்ந்த புடவையகம்

★ பட்டுச் சேலைகள்

★ பிளவுஸ் துணி வகைகள்

சிறுவர்களுக்கான
★ தைத்த உடுப்புக்கள்

அனைத்தும் எம்மிடம் மலிவாகப்
பெற்றுக்கொள்ள முடியும்.

**நாதன் புடவையகம்**

கிளை:
முருகானந்தா அழகுமாடம்
இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

With Best Compliments
FROM

**THAMPI COMMUNICATIONS**

90, Kanthapahsegaram Road
Jaffna

Head Office T. P. 0094. 21. 2040
177. Oldmoor Street 2504
2823
Colombo Fax 2040

மஹோற்சவ மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

ஆலய வர்ண வேலைகள்
ஓவிய வேலைகள், விளம்பர
எழுத்து வேலைகள் அழகாக
செய்து வழங்குபவர்கள்

விஸ்வப் பிரமச் செல்வன்
கந்தசாமி றதிஸ் (ராஜீ)

**அம்பாள் கலையகம்**

காளி கோவிலடி திருநெல்வேலி

நம்பிக்கை! நாணயம்!

22 கரட் தங்கப் பவுண்
நகைகளுக்கு
தவறாது விஜயம் செய்யுங்கள்
ஓடர்களுக்கு தங்க நகைகள்
செய்து கொடுக்கப்படும்

**நியூ லலிதா**
**ஜுவல்லர்ஸ்**

**NEW LALITHA**
**JEWALLARS**

170, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

மஹோற்சவ மலருக்கு

எமது வாழ்த்துக்கள்

**நியூ கமல்**

**செரமிக்ஸ்**

37, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

மஹோற்சவ மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

உங்கள் தையல் மெசின்கள்
பழுதடைந்து விட்டதா?
கவலை வேண்டாம்
குறைந்த பணத்தில்
திருத்தித் தரப்படும்.

பழைய தையல் மெசின்கள்
வாங்கவும், விற்கவும்

**கௌரி**

**தொழிலகம்**

538, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

உ

# இந்து சமயத்தில் விநாயகர் வழிபாடு

## விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவம்

இந்து சமயத்தவர்கள் மத்தியில் விநாயகர் வழிபாடு மிகவும் முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்துக்கள் தாம் எக்காரியத்தை ஆரம்பிக்க முன்பும் விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே காரியங்களை ஆரம்பிப்பார்கள். இடையூற்றை நீக்குபவரும் எடுத்த கருமங்களைக் கைகூடச் செய்பவரும் கணபதியே என்பதனால் நாம் முதலில் அவரை வணங்குகிறோம். இதனாலேயே அவருக்கு விக்கினேஸ்வரன் என்ற பெயர் உண்டாயிற்று. பிரணவம் என்ற ஓங்கார வடிவினர் கணபதி என்றும் அவருடைய துதிக்கை ஓங்காரத்தையே குறிக்கிறது என்றும் காணாபத்திய மதத்தினர் கொள்வார்கள் கணங்களுக்குத் தலைவர் ஆகையால் கணபதி என்றும், துதிக்கையோடு சேர்ந்து ஐந்து கரங்களை உடையவர் ஆகையால் ஐங்கரன் என்றும், தமக்கு மேலே வேறொரு தலைவர் இல்லாதவராகையால் விநாயகர் என்றும், பிரபஞ்சம் முழுவதையும் தம்முள் அடக்கிக் கொள்வதால் லம்ப உதரர் (லம்போதரர்) என்றும் பல பெயர்கள் அவருக்கு வழங்கப்படுவதுண்டு.

இந்து சமயக் கிரியைகள் அனைத்தையும் ஆரம்பிக்கும் பொழுது சிவாச்சாரியார்கள் விநாய்கரை வணங்கியே ஆரம்பிப்பார்கள். பின்வரும் மந்திரத்தைக் கூறி கிரியைகளை ஆரம்பிப்பார்கள்.

"சுக்கிலாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் தியாயேத் சர்வவிக்னோப சாந்தயேத்"

உலகில் வாழும் இந்துக்கள் அனைவரும் விநாயகப் பெருமானை முதற் தெய்வமாக வழிபடுகிறார்கள். சகல மங்கள காரியத்தின் ஆரம்பத்திலும் முதலில் விநாயகரை வழிபட்டே காரியத்தை ஆரம்பிப்பார்கள். எழுத ஆரம்பிக்கும் போதும் பிள்ளையார் சுழியிட்டு கணபதியை வழிபட்டே ஆரம்பிப்பர். எளிமையான அமைப்பில் வணங்கக் கூடிய ஞானத் தெய்வமாக விநாயகப் பெருமான் காணப்படுகிறார். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பிள்ளையார் உருவங்கள் அரசமரங்களினடியிலும் குளத்தங்கரைகளிலும் வயலோரங்களிலும் வைத்து வணங்கப்பட்டு வருகின்றன. அரசமரங்களின் அடியில் வைத்து வழிபடும் விநாயகர் அரசன் ஆகிவிடுகிறார். மகாயான பௌத்தம் விநாயகர் வழிபாட்டை ஏற்று சீனா, யப்பான் போன்ற நாடுகளில் நிலைபெறச் செய்துள்ளது.

## விநாயகர் உருவத்தின் தத்துவம்

கணபதி என்ற பெயருக்கும் கணபதியின் தோற்றத்துக்கும் தத்துவ விளக்கங்கள் கூறப்படுகிறது. ககரம் மனோவாக்குகளையும் ணகரம் அவற்றைக் கடந்த நிலையையும் குறிக்க கணபதி கணேசன் ஆகிறார். ககரம் அறிவையும் ணகரம் வீட்டின்பத்தையும் குறிக்கும் என்பது இன்னொரு விளக்கமாகும். பிள்ளையாரின் துதிக்கையில் இருக்கும் மோதகம் இன்பத்தைப் பயக்கும் ஞானமாகும். வாகனமான பெருச்சாளியானது நமக்குள் இருந்து நம்மை அளிக்கும் கள்ளத்தனமான உலகப் பற்றின் உருவகமாகும். கணபதி மடிமேல் சக்தியை வைத்துக்கொண்டு வல்லப கணபதியாக எழுந்தருளி உள்ளார். கணபதி அறிவையும் பயனையும் தருவதால் அவருக்கு புத்தி சித்தி என்று இரு தேவியர்கள் இருக்கிறார்கள். பிள்ளையாரும் சிவனைப் போலவே ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காகப் பஞ்சகிருத்தியங்களைச் செய்கிறார்.

ஐந்து முகம் உள்ள விநாயகரின் வடிவம் பஞ்சமுக விநாயகர் வடிவமாகும். நாலு திசைகளை நோக்கியும் மேல் நோக்கியும் உள்ள இத்திருமுகங்கள் இறைவனின் எல்லையற்ற ஆற்றலைக் குறிக்கும். பாசம் படைத்தலையும், ஒற்றைக் கொம்பு காத்தலையும், அங்குசம் அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அருளளையும் குறிக்கும் என்பர். இவருடைய திரு உருவத்தில் யானைத் தலையும் மனித உடம்பும் கலந்து விளங்குகின்றன. யானை முகத்தை உடைய விநாயகப் பெருமான் கருணையெனும் மதநீரைப் பொழிந்து கொண்டு இருக்கிறார் எனவும் அவரது துதிக்கை மும்மலமாகிய காட்டினை ஒழித்து நம்பிக்கை ஊட்டுகிறது எனவும் ஞானிகள் கூறுவர்.

## வேத உபநிடதங்களில் பிள்ளையார் வழிபாடு

வேத இலக்கியங்களில் யானைமுகன் வழிபாடு நேரடியாகக் குறிக்கப்படவில்லை. இருக்கு வேதத்தில் இடம்பெற்றுள்ள பிரஹ்மனஸ்பதி பற்றிய பாடலிலும் இந்திரனைக் குறித்துப் பாடப்பெற்ற பாடல் ஒன்றிலும் காணப்பட்ட சில அடைமொழிகள் பிற்காலத்தில் கணபதிக்குரியனவாகக் கூறப்பட்ட இயல்புகளுடன் ஒத்துக் காணப்படுகின்றன. கிருஷ்ணயசுர் வேதத்திலுள்ள சதருத்திரீயம், வாஜசனேய சம்ஹிதை ஆகியவற்றிலும் கணபதி பற்றிய சில குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சதருத்திரீயம் கணபதிக்கு வணக்கம் என்று உருத்திரனையே வணங்குகிறது. உருத்திரன் கணங்களிற்குத் தலைவனாக இங்கு கூறப்பட்ட போதும் புராணங்களில் இவ்வியல்பு கணபதிக்கு உரியதாகவே குறிக்கப்படுகிறது. கணேஷ காயத்திரி மந்திரத்தில் கூறப்படும் பாடல் விநாயகப் பெருமானை நோக்கித் துதிக்கப்படும் அனுபூதி நிறைந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது. (தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி)

அதர்வசிரஸ் உபநிடதம் விநாயகரை உருத்திரனுடன் சேர்த்துக் கூறுகிறது. கணபதி உபநிடதம் ஏரம்ப உபநிடதம் என்பனவும் விநாயகரையே முழு முதற் கடவுளாகக் கூறுகின்றன. கணபதியைக் குறிப்பதாகக் கருதப்படும். சில குறிப்புகள் வேத இலக்கியங்களில் காணப்பட்ட போதும் வேத காலத் தெய்வக் குழுவில் கணபதி என்ற பெயரிலோ அல்லது அவனுக்குரிய வேறு எந்தப் பெயரிலோ தனித் தெய்வமாக அவன் இடம் பெறவில்லை, மனுதர்ம சாஸ்திரத்தில் இடம் பெற்றுள்ள குறிப்பு ஒன்று சிவனைப் பிராமணர்களின் தெய்வமாகவும், கணேசனைக் சூத்திரர்களின் தெய்வமாகவும் குறிப்பிடுகிறது. கணபதி முக்கியமற்ற கிராமத் தெய்வமாகவும் கீழ் வகுப்பினரால் வழிபடப்பட்டவனாகவும் இருந்ததினால் அவன் வேதகாலத் தெய்வம் குழுவில் தனியாக இடம்பெறவில்லை.

## இதிகாச புராணங்களில் கணபதி வழிபாடு

இதிகாசங்கள் கூறும் தெய்வக் குழுவில் கணபதி இடம் பெறவில்லை. அவற்றிற் காணப்படும் ''கணேஷ், 'கணேஷ்வர் ஆகிய பெயர்களும் சிவனையே குறித்தன. வியாசரின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாபாரதத்தினை விநாயகப்பெருமான் தமது திருமருப்புக் கொண்டு எழுதினார் என மகாபாரத வரலாறு கூறுகிறது. புராணங்களில் விநாயகப் பெருமான் கணபதி, விநாயகன் என்றே குறிப்பிடப்படுகிறார்.

ஸ்கந்தபுராணம் பார்வதியை மட்டும் அவனுடைய படைப்புடன் தொடர்புபடுத்திக் கூறும். ஆனால் பிரமவைவர்த்தம் போன்ற புராணங்களில் சிவன் பார்வதி ஆகிய இருவரும் கணபதியின் படைப்புக்கு காரணகர்த்தாக்கள் என்று கூறப்பட்டுள்ளது. சிவன் உமாதேவியார் ஆகியோரின் மூத்த குமாரராக விநாயகப் பெருமான் புராணங்களில் சித்தரிக்கப்படுகிறார். விநாயக புராணம் விநாயகப் பெருமானின் அருட்சிறப்புக்களையும் அவரின் வீரதீரச் செயல்களையும் எடுத்து விளக்குகிறது. கயமுகாசுரன்

ஆகிய அசுரன் தேவர்களைப் பெரிதும் துன்பப்படுத்தினான். கயமுகாசுரன் தேவர்கள் தன்னைக் காணும் போதெல்லாம் கரங்களைப் பொத்திப் பிடித்து நெற்றியிலே மூன்று முறை குட்டி கைகளை மாறிச் செவிகளைப் பிடித்து மூன்று முறை இருந்தெழுதல் வேண்டும் என்று கட்டளையிட்டான். கயாமுகசுரனின் அக்கிரமங்கள் அளவு கடந்த நிலையில் தேவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையீட்டனர். சிவபெருமான் அவர்களின் முறையீட்டுக்கு இரங்கி "உங்கள் துயரை விரைவில் துடைப்போம்" என்று உறுதியளித்தருளினார். சிவனிலிருந்து வேறாகாத சக்தியாகிய விநாயகப்பெருமான் தோன்றி கயாமுகசுரனை வதம் செய்தார். கயமுகாசுரன் எலிவாகனமாகி விநாயகப்பெருமானைத் தாங்கிக் கொள்ளும் பேற்றினைப் பெற்றான் என வரலாறுகள் கூறுகின்றன. கயமுகாசுரனுக்கு முன்பு தோப்புக்கரணம் போட்டு வழிபட்ட தேவர்கள் அசுரனை அழித்த நன்றிக்காக விநாயகப்பெருமான் முன்னிலையில் தோப்புக்கரணம் போட்டு வழிபட்டார்கள். இதனால் இன்றும் விநாயகரை வழிபடும் அடியவர்கள் அனைவரும் தோப்புக்கரணம் போட்டு வழிபாடு செய்து வருகிறார்கள்.

### விநாயக வடிவத்தின் வேறுபாடுகள்

ஆரம்பகாலத்தில் விநாயகப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட சிலைகளில் அவருக்குத் துதிக்கையும் இரு திருக்கரங்களும் பெரிய வயிறும் காணப்படுகின்றன. கி. பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்த பிள்ளையார் சிலையொன்று ஆப்கானிஸ்தானிலுள்ள கபூலில் கிடைத்தது. இவர்கள் இதனை இன்றும் வழிபடுகின்றனர். வட இந்தியாவில் உள்ள மத்திய பிரதேச மாநிலத்தின் பூமராவில் கிடைத்துள்ள கணேசர் சிலை கணேஷாணியுடன் (கணேச சக்தி) காணப்படுகிறது. சக்தி அவரின் வலது தொடையில் இருந்து கொண்டு அவருக்கு லட்டுக்களை பாத்திரத்திலே வழங்குகிறார். இவற்றை அவர் துதிக்கையால் எடுக்கிறார்.

தென் இந்தியாவிலே பெரும்பாலும் பிரமச்சாரியாக விளங்கும் விநாயகர் வட இந்தியாவிலே சக்தியுடன் வீற்றிருக்கிறார். இதற்கு எதிர்மாறாக முருகப்பெருமான் வட நாட்டிலே பெரும்பாலும் பிரமச்சாரியாகவும் தென் நாட்டிலே இரு சக்திகளுடனும் விளங்குகிறார். பொதுவாகக் காணப்படும் விநாயகரின் வடிவத்திலே முன் வலக்கையிலே அங்குசமும் இடக்கையில் பாசமும் காணப்படும். துதிக்கை இடம் புரியாகவோ வலம்புரியாகவோ இருக்கும். இடம்புரியாக இருப்பின் மோதகத்தினைத் தொடும்.

விநாயகருக்கு ஒரு சக்தி கூறப்படும்பொழுது கணேசாணி அல்லது வல்லபா என்று அழைக்கப்படும். இரு சக்திகள் என்கிறபோது சித்தி புத்தி என்று அவர்கள் அழைக்கப்படுவார்கள். விநாயகப் பெருமானை பஞ்சமுக விநாயகராக வழிபடுவதும் உண்டு. சில இடங்களில் லட்சுமியுடன் சேர்ந்த கணபதி வடிவத்தினைக் காணலாம். சிவபெருமானைப் போன்று கணேசரையும் இலிங்கவடிவிலும் வழிபடுவார்கள். மூஷிகமே விநாயகரின் ஊர்தியாக விளங்கினாலும் சில வேளைகளில் சிங்கமும் இவரின் ஊர்தியாகக் கூறப்படுகிறது.

### பிறசமயங்களிலும் பிற நாடுகளிலும் விநாயகர் வழிபாடு

அவைதிக சமயங்களாகிய சமணம் பௌத்தம் ஆகியவற்றிலே விநாயகர் வழிபாடு இடம்பெற்றுள்ளது. குஜாராத்திலுள்ள கற்பாறையில் அமைந்த கோயில்களில் சமணரும் விநாயகரை வழிபடுகின்றனர். சமண சமய வழிபாட்டிடங்கள் சிலவற்றிலே உலோகத்தாற் செய்த விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன. புத்த சமயத்திலே கணபதிக்கு முக்கியமான இடமொன்றுண்டு. கணபதி ஹிருதயம் என்ற மந்திரத்தினைப் புத்த பெருமானே தனது பிரதம சீடரான ஆனந்தருக்கு உபதேசித்தாகக் கூறப்படு

கிறது. ஓரளவு வைதிக சமயங்கள் ஊடாகவும் முக்கியமாகப் பௌத்தம் மூலமாகவும் கணபதி வழிபாடு இந்தியாவுக்கு வெளியே பர்மா, மலேஷியா, இந்தோனிஷியா, சீயம் கம்போடியா, வியட்னாம், சீனா, மங்கோலியா, யப்பான் ஆப்கானிஸ்தான், திபெத் ஆகிய பல நாடுகளுக்கும் பரவியுள்ளது.

## தமிழகத்தில் கணபதி வழிபாடு

கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழகத்தின் பெரும்பகுதியினை ஆட்சி செய்த பல்லவ நரசிம்மவர்மனின் வாதாபிச் சாளுக்கியருக்கு எதிரான வெற்றிக்குப் பின்னரே இவ் வழிபாடு தமிழகத்தில் ஏற்பட்டதாக வரலாற்றாசிரியர்களின் ஒரு சாரார் கருதுவர். பல்லவ அரசின் தளபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) வாதாபியிலிருந்து கொண்டு வந்த பொருட்களிலே பிள்ளையார் சிலையும் ஒன்றாகும். இச்சிலையினைப் பிரதிஷ்டை செய்து கட்டப்பட்ட கோயிலே கணபதீச்சரம் என்று அழைக்கப்படும் தலமாகும். இதன் பின்பு தமிழகத்தின் பல இடங்களிலும் கணபதி ஆலயங்கள் அமைக்கப்பட்டதாகவும் காலப்போக்கில் கணபதி வழிபாடு தமிழ்நாட்டில் முக்கிய இடம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. நாயன்மார்கள் தமது பாடல்களிலே விநாயகரைப் பற்றி பாடியுள்ளார்கள் ''பிடியதனுருவுமை கொளமிகு கரியது'' என்ற தேவாரத்தில் சம்பந்தரும் "கைவேழ முகத்தவனைப் படைத்தவர் போலும்'' என்ற தேவாரத்தில் அப்பரும் விநாயகரைப் பாடியுள்ளார்கள். கணபதிக்குரிய பெரிய கோயில்களில் திருச்சிராப் பள்ளியில் உள்ள உச்சிப்பிள்ளையார்கோயில் குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈழத்தில் கணபதி வழிபாடு

இலங்கை முழுவதும் கணபதி ஆலயங்கள் பல இருந்தன. பௌத் தசமயத்தவர்களும் விநாயகரை வணங்கி வருகிறார்கள். மிகிந்தலைக்கு அண்மையில் உள்ள கண்டக சேதிய ஸ்தூபியினைச் சேர்ந்த சிற்பங்களிலே யானைமுகமுள்ள உருவமுண்டு. துதிக்கை இடம்புரியாகவே உள்ளது. இது வக்ரதுண்டர் (விநாயகர்) உருவமாயிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இங்கு இவர் புத்த சமயச்சார்பான தெய்வமாகவே விளங்குகிறார். 1938 ஆம் ஆண்டிற்கு முன் அநுராதபுரத்திலுள்ள அரசமரத்தின் முன் கணேசர் சிலையொன்று இருந்ததாகவும், பௌத்தர்கள் அவருக்கு வணக்கம் செலுத்தி வந்தார்கள் எனவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணம் கண்டி வீதியில் இருக்கும் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்ற விநாயகர் தலமாகும். யாழ்ப்பாண மன்னர்கள் காலத்தில் பிள்ளையார் கோயில்கள் பல இடங்களிலும் அமைக்கப்பட்டன. நல்லூரில் வெயிலுகந்தப் பிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், கையிலாயபிள்ளையார் கோயில், வடமராட்சியில் வரணிக்கு அண்மையில் இருக்கும் தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் என்பன குறிப்பிடத்தக்க ஆலயங்களாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாமங்கப் பிள்ளையார் கோயிலும் வரலாற்றுப் பெருமை மிக்க தலமாகும்.

சிவத்தமிழ் வித்தகர்
சிவ மகாலிங்கம் விரிவுரையாளர்.
(பலாலி ஆசிரிய பயிற்சிக்கல்லூரி)

சிவமயம்

# கோயில்களும் இன்றைய சைவர்களும்

"கோயில் இல்லா ஊரிற்குடியிருக்க வேண்டாம்" என்பது பழமொழி "கோயில் உள்ள ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது புதுமொழி. கோயில்கள் கோயிலாக இருக்க வில்லை. கோயில் பரிபாலகர்களிடம் கருணை, சிந்தனை இல்லை. அர்ச்சகர் களிடம் பக்தி சிரத்தை இல்லை. மக்களிடம் தெய்வ சிந்தனை, தர்ம சிந்தனை இல்லை. இதனால் புதுமொழி தோன்றிவிட்டது.

மக்கள் கோயிலை நாடி வந்த காலம் ஒன்றிருந்தது, ஆனால் இனிமேல் கோயில்கள் மக்களை நாடிச் சென்றால்தான் மக்கள் கோயிலை நாடி வருவார்கள். மக்கள் உள்ளத்திலே தெய்வ நம்பிக்கையும், பக்தியும் மலிந்திருந்த காலத்தில் கோயிலை நோக்கி மக்கள் ஓடிவந்தார்கள். அலையும் மனத்தோடு வந்தவர்கள் ஆறுதல் பெற்றுச் சென்றார்கள்.

இந்தோனேசியாவில் சுமாத்திரா ஒரு தீவு. அதன் தலைப்பட்டணம் மேடான். மேடானில் 41 இந்து ஆலயங்கள் உள்ளன. ஒரே ஒரு தண்டபாணி கோயில் மாத்திரம் தான் உண்டு. மற்றவையெல்லாம் மாரியம்மன் கோயில்களே. இலங்கையில் கதிரேசன் கோயில்களை செட்டியார்கள் ஸ்தாபித்ததுபோல் அங்கும் செட்டியார்கள் தண்ட பாணிக் கோயில்கட்டி பரிபாலித்து வந்தார்கள்.

மேடான் நகரமத்தியிலே அமைந்திருப்பது ஒரு மாரியம்மன் கோயில். அது வானளாவ எழுந்த இராஜகோபுரத்தை உடையது. அதனைப் பரிபாலிப்பதற்கு பரிபாலன சபை என்பது ஒன்று உண்டு. சைவக்குருக்கள் ஒருவர் தான் கோயிற்பூசகராகக் கடமையாற்றுகிறார். பொதுமக்கள் அருச்சனைப் பொருட்களுடன் வந்து அருச்சனை செய்யுமாறு கேட்டால் எவ்வித பணமும் பெற்றுக்கொள்ளாமலேயே அருச்சனை செய்து கொடுக்கவேண்டும் என்பது பரிபாலனசபையினரின் கட்டளை. விரும்பிய வர்கள் உண்டியலில் விரும்பிய தொகையைப் போடலாம்.

கோயில் இலவச வைத்தியசாலை ஒன்றும், இலவச நூல் நிலையம் ஒன்றும் அமைத்துப் பணிபுரிகின்றது. கல்யாண மண்டபம் ஒன்று கட்டி ஏழைகளுக்கு இனாமாகத் திருமணம் நடத்தி வைக்கின்றது. கல்யாணப் பதிவும் எவ்வித ஊதியத்தையும் எதிர் பாராது நடைபெறுகின்றது.

இருபத்தைந்திற்கு அதிகமான மதப்பள்ளிகளை நடத்தி வருகின்றது. அதில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு கோயில் நிர்வாகமே சம்பளம் கொடுக்கின்றது. இத் தகைய சேவைகளால் கோயில் பொதுமக்களை நாடிச் செல்கின்றது. கோயில் பஞ்சாயத்து ஒன்றை ஏற்படுத்தி மக்களுக்கு ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக் கின்றது. கோயில் பஞ்சாயத்தின் தீர்ப்பினை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகின்றது.

பல ஏழைப்பிள்ளைகளுக்கு அவர்கள் படிக்க விரும்பும் வகுப்பு வரை சம்பளம் இல்லாமலே கல்வி வழங்கப்படுகின்றது. ஏதோ ஒரு விடயத்தை முன்னிட்டு பொது மக்கள் கோயிலை நாடி வரவேண்டியுள்ளது. வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் கோயில் பூசையிலும் கூட்டு வழிபாட்டிலும் முந்நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொள்கின்றார்கள். கோயிலும் மக்களும் இரண்டறக் கலந்து விடுகிறார்கள்.

கோயில் நிர்வாகம் இரு பிரேத வண்டிகளை பொதுமக்கள் சேவைக்கென்று வாங்கி விட்டிருக்கிறது.ஒருவர் வைத்தியசாலையில் இறந்துவிட்டால் அப்பிரேதத்தை வைத்திய சாலையிலிருந்து வீட்டிற்குக் கொண்டு சேர்த்தலும் வீட்டிலிருந்து மயானத்திற்கு கொண்டு சேர்த்தலும் மயானத்தில் இருந்து சாம்பலை எங்கு கரைக்கிறார்களோ அங்கு அதனைக் கொண்டு சேர்த்தலும் ஆகியவற்றை எவ்வித ஊதியத்தையும் எதிர்பாராது இனாமாகப் பணியாற்றுகின்றது.

அவர்கள் வேடிக்கை விளையாட்டுக்களைக் கோயில்களிலிருந்து தவிர்த்து விட்டார்கள். காவடி ஆட்டம், கரக ஆட்டம், தூக்குக் காவடி போன்றவை மக்களிடையே ஆத்மீகத்தை வளர்க்கப் பயன்படுவதில்லை என்பது அவர்கள் நம்பிக்கை. நாமஜெயம், அகண்ட நாமசங்கீர்த்தனம், தியானம் போன்றவற்றில் கூடுதலாகக் காலத்தைக் கழித்து அமைதியையும் சாந்தியையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

எங்கள் ஊர்க்கோயில்களிலே எந்தக் கோயிலிலே நூல்நிலையம் அமைத்துள்ளார்கள்? ஒவ்வொரு கோயிலிலும் பன்னிரு திருமுறைகளும், பதினெண்புராணங்களும், சித்தாந்த வேதாந்த நூல்களும் அருணகிரியார், தாயுமானார், வள்ளலார் போன்றோர்களின் நூல்களும், நூல் நிலையங்களில் வாங்கி வைக்கப்படவேண்டும். மக்கள் ஓய்வு நேரங்களில் கோயிலுக்கு வந்து அவற்றைப் பெற்று வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆத்மீக வளர்ச்சிக்கான சாதனைகள் கோயில்களில் முக்கியமாக இடம்பெறுதல் வேண்டும். வெள்ளிதோறும் தத்தம் வீடுகளுக்குப் பக்கத்திலுள்ள கோயில்களுக்கு மக்கள் குடும்பமாகச் செல்லும் பழக்கம் ஏற்படவேண்டும். எல்லாக் கோயில்களிலும் தவறாது கூட்டுவழிபாடு நடைபெறவேண்டும். அதில் குழந்தைகள் முதல் முதியவர் வரை எல்லோருமே கலந்து கொள்ளுதல் வேண்டும். வெள்ளிக்கிழமை மாலையில் விளையாட்டு, பொழுதுபோக்கு, மாலைநேர வகுப்புகள் என்பன தவிர்க்கப் பெற்று மாணவர்கள் எல்லோருமே கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்குப் பாடசாலை ஆசிரியர்கள், விளையாட்டு ஆசிரியர்கள் மாலைநேரவகுப்பு ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு மிக மிக அவசியம்.

இவற்றையெல்லாம் நடைமுறையில் கொண்டு வருவதற்கு சைவசமயப் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானதாகும். சைவம் தவிர்ந்த ஏனைய சமயங்களுக்குச் சமயத்தொண்டர்களுக்கும் சமூகத்தொண்டர்களுக்கும் நிறையப் பணி செய்கின்றார்கள். (சைவசமயத்திற்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சிலவற்றைத் தவிர அத்தகைய தொண்டர்களோ, நிறுவனங்களோ பெருமளவில் இல்லை என்றே கூறவேண்டும்).

நமது கோயில்களின் பெரும்பாலானவற்றுக்கு நிறையச் சொத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவை கோயிலுக்கோ அன்றிப் பொதுமக்களுக்கோ பயன்படுவதில்லை. பல கோயில் சொத்துக்களை ஊரவர்கள் தமது சொந்த நலனுக்குப் பயன்படுத்துகிறார்கள். கோயில் சொத்துக்களை அனுபவிக்கும் குடும்பங்கள் எதுவும் முன்னேறியதாகச் சரித்திரம் இல்லை. சில கோயில்களின் நிர்வாகிகள் கோயில் சொத்துக்களை தமக்குச் சொந்தமாக்கி விற்பனையும் செய்திருக்கிறார்கள். கோயில்கள் எல்லாம் கும்பிடுகிறவர்களுக்கே சொந்தமாக்கப்படுதல் வேண்டும், கோயிலுக்குப் பக்தியோடு சென்று கும்பிடுபவர்களே கோயில் நிர்வாகத்தில் இருக்க வேண்டும்.

கோயிலை நிர்வகிப்பவர்கள் சைவசார சிலர் களாக இருக்க வேண்டும். அவர்களுக்குக் கோயிலின் தத்துவமும் ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டும். அவர் நன்கு கற்றுணர்ந்த பூசகர்கள் நியமிக்கப் பெற்று அவர்களுக்குக் கோயில் நிர்வாகம் நல்ல சம்பளம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் பூசகரும் பக்தி சிரத்தையாகப் பூசை செய்ய முடியும்.

கோயிலை நல்ல முறையில் நடத்துவதற்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு அவசியம். ஒவ்வொரு கோயிலைச் சுற்றியும் அக்கோயிலை வழிபாடு செய்பவர்கள் குறைந்தது நூறு குடும்பங்களாவது இருப்பார்கள். ஒவ்வொரு குடும்பமும் தினமும் ஒரு பிடி அரிசி தியாகம் செய்தால் முப்பது நாட்களுக்கு முப்பது பிடி அரிசி ஆகிறது. இது ஒரு கிலோ அரிசி ஆகும். ஒரு கிலோ அரிசி 12 ரூபா. நூறு குடும்பத்திலிருந்தும் மிக இலகுவாக 1200 ரூபா கோயில் பரிபாலனத்திற்குக் கிடைத்து விடுகிறது.

வீட்டில் ஒரு தரம் உண்டியல் வைத்துச் சில்லறை கிடைக்கும் போதெல்லாம் குடும்பத்திலுள்ளவர்கள் அத்தனைபேருமே அவ்வுண்டியலில் பணம் போட்டு வரலாம். அப்பணம் பொதுத்தர்மங்களுக்கும் கோயில் பரிபாலனத்திற்கும் பயன்படுத்தலாம்.

மக்களுடைய உள்ளத்திலே பக்தி உணர்வு ஊட்டப்பட வேண்டும். தனிமனிதனுடைய உள்ளத்திலே அமைதி உண்டானால் சமூகத்திலே அமைதி உண்டாகும். சமூகத்திலே அமைதி உண்டானால் தேசத்திலே அமைதி உண்டாகும். அமைதி என்பது ஆத்மீகம் ஒன்றினால் தான் ஏற்பட முடியும்.

இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கம் இல்லா
வெற்றுயிர்க்கு வீடு மிகை — திருவருட்பயன்

ஆத்ம ஜோதி
ந. முத்தையா

நன்றி:
கும்பாபிஷேகமலர்
கொக்குவில் மஞ்சவனப்பதி
முருகன் ஆலயம்

# திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார்
## ( ஸ்ரீ காயா ரோகண மூத்த நயினார் )
# திருவூஞ்சல்

**காப்பு**

**ஆசிரியர் விருத்தம்**

திருச்சிற்றம்பலம்

சீராரும் யாழ்ப்பாணத் திருநெல்வே லிப்பதியில்
சிறப்புடனே கோயில் கொள்ளுந் திகழைந்து கரத்தாராம்
பேராருந் தலங்காவற் பிள்ளையார் தாமாடப்
பெருமைபெறு திருவூஞ்சற் பாமாலை யான்பாடக்
காராருங் கற்பகம்போற் கருதடியார் தமைக்காத்துக்
காயாரோ கணராகிக் காசினிமே லருள்சுரக்கும்
பாராரும் போற்றுநல வல்லமைசேர் பாகத்துப்
பாசாங் குசத்தாராங் கணபதிதாள் காப்பாமே.

## திருவூஞ்சல்

சீராரும் நான்மறைகள் கால்க ளாகச்
செப்பரிய ஆகமங்கள் விட்ட மாகப்
பேராருங் கலைபலவுங் கயிற தாகப்
பெருமைபெறு பிரணவமே பலகை யாகச்
சேராரும் மந்திரங்கம் பலம தாகச்
செம்மையு டனமைந்த திருவூஞ்சல் தனின்மேவிப்
பாராரும் போற்றுதலங் காவல் கொள்ளும்
பகர்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (1)

பூதகணம் புடைநின்று போற்றி செய்யப்
புண்ணியநல் லடியார்கள் வடந்தொட் டாட்ட
வேதஇசை அந்தணர்கள் விரும்பி ஓத
விண்ணவரும் மண்ணவரும் வணங்கி ஏத்தக்
காதல்மிகு மடியார்கள் கசிந்து பாடக்
காயாரோ கணராகக் கருது கின்ற
ஓதுபுகழ்த் தலங்காவற் பிள்ளை யாராம்
உயர்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (2)

சந்திரனுஞ் சூரியனுங் குடைகள் தாங்கத்
தக்கநல வாயுதேவர் கவரி வீசச்
சுந்தரமார் வருணான லவட்ட மேந்தத்
தோத்திரங்கள் ஓதுவார் ஓதி ஏத்தக்
கந்தமலர்ப் பொழில்சூழ்நெல் வேலி வாழும்
காயாரோ கணராகக் காட்சி நல்கும்
நந்தமது தலங்காவற் பிள்ளை யாராய்
நவில்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (3)

உலகமெலாம் படைக்கின்ற பிரமன் தானும்
    உலகமவை காக்கின்ற திருமால் தானும்
அலகில்பல தேவர்கட்கு அதிபன் தானும்
    அளவில்லா நிதிபதியாம் அவனுங் கூடிப்
பலபலவாம் புகழ்பாடி வடந்தொட் டாட்டப்
    பகர்காயா ரோகணராம பகவா னாகித்
தலங்காவற் பிள்ளையரி ராய்மன்னு மெங்கள்
    தகுமூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (4)

மாதுமையாம் பார்ப்பதியை மணந்த ஞான்று
    மன்னுவட திசைதாழத் தென்பா லோங்க
ஏதுமறி யாதவர்கள் இரங்கி ஏங்க
    ஈசனவர்க் கருள் சுரக்க எண்ணி அன்று
ஓதுதவ அகத்தியரைத் தென்பா லேவ
    உறுமவரின் கமண்டலநீர் கவிழ்த்து வீழ்த்தி
தீதுபல நீக்கியருள் காயாரோ கணராகும்
    திருமூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல் (5)

காசினியோர்க் கிடர்புரிந்த கயமுகனோ டன்று
    கருதுமமர் புரிந்தவனைக் காதி வீழ்த்தத்
தேசுதிகழ் ஆகுவென அவனும் மேவச்
    செப்பரிய வாகனமாய் அதனை ஊர்ந்து
பேசினிய அருள்சுரந்த பிள்ளை யாராய்ப்
    பிறக்குங்கா யாரோ கணரு மாகி
மாசிலாத் தலங்காவல் மகிழ்ந்து செய்து!
    மகிழ்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (6)

திருமாலும் பிரமனுமே சேர்ந்து நின்று
    செய்தொழில்கள் மேம்படநல் லருள்பெற் றுய்ய
வருதேவர் கோனுக்கும் வரங்க ளீந்து
    மன்னுநல விநாயகராய் வாழு மெங்கள்
திருநெல்வே லிபுரக்குந் தேவ தேவே!
    செப்புங் காயாரோ கணரு மாகி
வருமெங்கள் தலங்காவற் பிள்ளை யாரே!
    வளர்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல் (7)

அருள் பொழியுந் திருவதன மசைந்து தோன்ற
    ஐந்துதிருக் கரங்களுமே அசைந்து தோன்ற
மருவினிய பூணூலு மசைந்து தோன்ற
    மற்றுள்ள ஆபரண மசைந்து தோன்றக்
கருதரிய கழலிணைக ளசைந்து தோன்றக்
    காயாரோ கணராகி வாழு மெங்கள்
தருநிலவு தலங்காவற் பிள்ளை யாராம்
    தவமூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (8)

திருநாகைக் காரோணத் தெந்தை தந்த
    திருவல்ல பைபாகா ஆடீ ரூஞ்சல்!
வருகோயிற் பணிபலவுங் கனவிற் காட்டி
    வாகுடனே முற்றுவிப்பீர்! ஆடீ ரூஞ்சல்!
குருவெனவே எழுந்தருள்வீர்! ஆடீ ரூஞ்சல்
    குஞ்சரநன் முகத்தோரே! ஆடீ ரூஞ்சல்!
அருள்காயா ரோகணரே! ஆடீ ரூஞ்சல்!
    அருள்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (9)

ஏரம்ப மூர்த்தியாரே! ஆடீ ரூஞ்சல்!
    எங்கள்குலக் காவலரே! ஆடீ ரூஞ்சல்!
சேர்பாசாங் குசத்தாரே! ஆடீ ரூஞ்சல்!
    செங்கண்மால் மருகோனே! ஆடீ ரூஞ்சல்!
பார்புரக்கும் நாயகரே! ஆடீ ரூஞ்சல்!
    பகர்சித்தி புத்திபாகா! ஆடீ ரூஞ்சல்!
சீர்காயா ரோகணரே! ஆடீ ரூஞ்சல்!
    திகழ்மூத்த நயினாரே! ஆடீ ரூஞ்சல்! (10)

## வாழி

உலகுபுகழ் வேதகலை உயர்ந்து வாழி!
    ஓதுருமா கமங்களவை உயர்ந்து வாழி!
அலகில்புக ழந்தணரான் பூதி வாழி
    ஐந்தெழுத்து மடியாரும் ஓங்கி வாழி!
பலநலஞ்சேர் முகில்வாழி! பாரோர் வாழி!
    பல்குமர சனுவாழி! செங்கோல் வாழி!
தலங்காவற் பிள்ளையார் தாள்கள் வாழி!
    தவமூத்த நயினார்தாள் வாழி! வாழி! (11)

## எச்சரிக்கை

திருவார் பிரணவ ரூபவி நாயகா! எச்சரிக்கை!
மருவார் துளவணி மான்மரு கோனவன் எச்சரிக்கை!
வருவார் வினைகெட வாழரு ளீகுவன் எச்சரிக்கை!
முருகார் தலங்காவல் மூத்த நயினாரே! எச்சரிக்கை!

## பராக்கு

ஐங்கரக் கடவுளாம் அண்ணல் பராக்கு!
    ஆதிமுத லாகிய ஐயன் பராக்கு!
திங்களணி வேணியர் செல்வன் பராக்கு!
    திகழுபூ தாகாரச் செல்வன் பராக்கு!
தங்குமருள் தந்திடுந் தலைவன் பராக்கு!
    தலங்காவல் கொன்கின்ற தலைவன் பராக்கு
மங்கள காயாரோ கணரே! பராக்கு!
    மருவுநன் மூத்த நயினார் பராக்கு!

## லாலி

ஓங்காரக் கணபதியே! லாலி! சுபலாலி!
உமைசிவனின் பாலகனே! லாலி! சுபலாலி;
ஆங்காரந் தீர்ப்பவனே! லாலி! சுபலாலி!
அங்குசபா சமுடையாய்! லாலி! சுபலாலி!
நீங்காத ஏரம்பா! லாலி! சுபலாலி!
நினைகாயா ரோகணரே! லாலி! சுபலாலி!
பாங்கார் தலங் காவலனே! லாலி! சுபலாலி!
பகர்மூத்த, நயினாரே லாலி! சுபலாலி!

## மங்களம்

திருவாரும் பிள்ளையார்க்கு ஜெய மங்களம்! சிவ
பெருமாற்கும் தேவியர்க்கும் சுப மங்களம்!
தேவர்சிறை மீட்டுக்காத்த செய்யதிரு முருகனுக்கும்
பூவலயம் காக்கின்ற புகலுநல்ல வைரவர்க்கும்
பாவமலை போக்குகின்ற பத்திரைதன் கேள்வனுக்கும்
தேவாதி தேவர்யார்க்கும் தெய்வங்கள் யாவற்கும்
மங்களம்! ஜெயமங்களம்! மங்களம்! சுபமங்களம்!
மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

திருச்சிற்றம்பலம்.

(பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்களால்
1979 – ஆண்டு இயற்றப்பட்டது)

இறைவன் என் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்கவேண்டும்.

குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ?

அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இருக்கமாட்டான்.

ஆனபடியால், சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனம் தெளித்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழ வைவ, இறைவன் அந்த உள்ளத்தில் எழுந் தருளுவான்.

திருமுருக கிருபானந்த வாரியார்

# திருவுருவப் படத் திரைநீக்க விழா

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தின் நீண்ட காலமாகப் பிரதம குருவாகப் பணியாற்றியதோடு இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கும் தன்னை முழுமையாகத் தெய்வீக உணர்வோடு அர்ப்பணித்த அமரர் சிவஸ்ரீ நா. சண்முகரத்தினக் குருக்களை எமது திருநெல்வேலிக் கிராம மக்கள் என்றும் நினைவில் இருத்திக் கௌரவிக்கும் முகமாக அவரது திருவுருவப் படத்தை ஆலய மண்டபத்தில் வைப்பது என்று விரும்பினார்கள்.

கடந்த தைப்பூசத்தினத்தன்று (31 - 10 - 98) அவரது திருவுருவப் படம் திருநெல்வேலி அருள்மிகு சிவகாம சுந்தரி அம்பாள் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு இடம் பெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து பெருந்திரளான மக்கள் அவரது திருவுருவப் படத்தை மங்கள வாத்தியங்களுடன் அம்மன் வீதி வழியாக ஊர்வலமாக மேற்படி ஆலயத்திற்கு எடுத்து வந்தார்கள்.

அவ்வீதியில் உள்ள மக்கள் தங்கள் இல்லங்களிற்கு முன்னால் பூரணகும்பம் வைத்து திருவுருவப்படத்திற்குப் பூமாலை அணிவித்து உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்திய நிகழ்வு அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது. திருநெல்வேலி மத்திய கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ச. பசுபதி தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா கலந்து கொண்டு அமரர் சிவஸ்ரீ கா. சண்முகநாதக் குருக்களின் திருவுருவப்படத்தைத் திரைநீக்கம் செய்து வைத்துச் சிறப்புரையாற்றினார்.

மற்றும் திருநெல்வேலி கிராம] அலுவலர்கள் க. சிவராசா, திரு க. நித்தியானந்தன் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. ந. விஜயசுந்தரம் (B. A) ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி. ச. தங்கப்பொன், செல்வி வி. சசிபாரதி உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

எமது கிராம மக்களின் ஆதரவோடு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த பத்திரிகையாளரான எஸ். என். இராமச்சந்திரா நன்றி உரை நிகழ்த்தினார்.

சி. நவகாந்தன்
திருநெல்வேலி

---

நீ வயலில் எந்த விதையை விதைக்கிறாயோ அந்த விதைதான் விளைந்து உன் வீட்டிற்கு வரும். கம்பை விதைத்துவிட்டு, கோதுமையை எதிர்பார்க்கக் கூடாது. கருவேலை நட்டுவிட்டு சந்தன மரத்தைப் பெறமுடியாது.

அது போல நீ நன்மை செய்தால் உனக்கு நன்மையையே வரும்; தீமையைச் செய்தால் தீமையை அனுபவிப்பாய்.

திருமுருக கிருபானந்தவாரியார்

# ஆலய திருப்பணிக்கு நாம் அனைவரும் உதவுவோம்

*"தோன்றலின் பலன் தொண்டு செய்வதே"*

*நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால், திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தின் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தைப் பற்றி, நான் ஒரு நாள் ஆலயத்தில் அர்ச்சனை செய்துகொண்டிருக்கும்போது ஆலய பிரதம குருவும், எனது அன்புக்கும், மதிப்பிற்கும் உரிய சிவஸ்ரீ நா. கனகசாபதிக் குருக்கள் ஐயா அவர்கள் கூறினார்.*

*மேற்படி ஆலயத் திருப்பணி வேலைகளிற்கு உதவும் வகையில் அடியேனால் இவ்வருடம் வெளியிடப்படும் மஹோற்சவ மலரை விநாயகர் அடியார்களிற்கு மலர் ஒன்று 100 ரூபாவிற்கு திருப்பணி அன்பளிப்பாக வழங்கி அதன் மூலம் கிடைக்கும் முழுப் பணத்தையும் கொண்டு ஆலயத் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள முன் வந்துள்ளேன்.*

*எமது இறைபணிக்கு விநாயகர் அடியார்கள் அனைவரும் நல் ஆதரவும், ஒத்துழைப்பும் தருவார்கள் என்று நம்புகின்றேன். இன்றைய சூழ்நிலையில் இப்படி ஒரு மலரை அச்சிட்டு வெளியிடுவது இலகுவான விடயம் இல்லை. அப்படியிருந்தும் தலங்காவலனின் பேரருளாலும், எனது கடின முயற்சியினாலும் இந்த மஹோற்சவ மலரை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.*

*இந்த தெய்வீகப் பணிக்கு அடியார்கள் அனைவரும் இம்மலரைப் பணம் கொடுத்து வாங்கி இவ் ஆலயத்தின் திருப்பணிக்கு உதவுவீர்களாக.*

*இம் மலரில் ஏதாவது தவறுகள் காணுமிடத்தில் பெருமனதுடன் மன்னித்து அத்தவறுகளை எனக்குத் தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*எல்லாம் வல்ல தலங்காவலன் அருள் அனைத்து உயிர்களிற்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.*

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

**எஸ். என். இராமச்சந்திரா**
*[மலர் தொகுப்பாசிரியர்]*

எப்போதுமே கடவுளை நினைத்தால் தீமைக்கே இடமிராது. தொல்லைகளும் துயரங்களும் அதிகமாகும் போது நாத்திகன் கூடக் கடவுளை நினைக்கிறான். மனதைப் பக்குவப்படுத்தி, புலன்களை அடக்கி வாழும்போது உன் உள்ளேயே நீ கடவுளைக் காணலாம்.

**ஒரு மகான்**

மஹோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

பலசரக்கு பொருட்களை மலிவாகப் பெற்றிட

ஆதவன் றேடிங் கொம்பனி

AATHAVAN TRADING COMPANY

T. P: 021 2817 328, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

---

யாழ் நகரில் பலசரக்கு பொருட்களின் தேவைகட்கு நாடுங்கள்

SARAVANA TRADERS

சரவணா றேடர்ஸ்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

MACKMILAN BOOKS CENTRE

மக்மிலன் புத்தகசாலை

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

ஆங்கில மருந்துகள் மலிவாக பெற்றிட விஜயம் செய்யுங்கள்

VASANTHA PARMACEY

வசந்தா மருந்தகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

ஆங்கில மருந்துகள் மலிவாக பெற்றிட இன்றே விஜயம் செய்யுங்கள்

THANGAVELU PARMACEY

தங்கவேலு மருந்தகம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

றேடியோ T. V விற்பனையாளரும். கடிகாரங்கள் திருத்துபவர்களும்

வீனஸ் டெல்கா

சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம்.

---

PREM BOOK CENTRE

பிறேம் புத்தகசாலை

19, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்,

---

மாயவன் போட்டோ பிரதிகள் சேவை

சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி

யாழ்ப்பாணம்.

மஹோற்சவ மலர் சிறக்க

எமது வாழ்த்துக்கள்

உள்ளூர் விளைபொருட்கள் விற்பனையாளர்

சிவகாமி றேடர்ஸ் சிவகாமி அம்பாள்

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. — 130, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 2965 — தொலைபேசி இல: 2566

---

மஹோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

எர்மிடம்

பூக்கன்றுகள், கனிமரக்கன்றுகள்,
அலங்காரச் செடிகள், றோசாப்பூக்கள்

மற்றும் அனைத்து வகை கன்றுகளும்
மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி சேவையையும்
பெற்றுக்கொள்ளலாம்.

T. P. No: 021 - 2976
009421 - 2976

பூங்கனிச் சோலை

இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
முடமாவடி.

மஹோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

திரு. து. நடனகுமார்

THREE STAR RECREATION CLUB

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

குறைந்த கட்டணத்துடன்
உங்கள் மங்கள வைபவங்களுக்கு
எங்களை அழைத்து மகிழுங்கள்

சண் விடியோ

*SHAN VEDIO*

வீடியோ புகைப்படச் சேவை

செங்குந்தா வீதி, திருநெல்வேலி.

## நெஞ்சில் நிறைந்த நன்றிகள்

அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் கோவில் மஹோற்சவமலர் வெளிவருவதற்கு அன்பளிப்பு வழங்கிய இனிய நண்பர்களுக்கும் மற்றும் விளம்பரங்கள் தந்து உதவிய வர்த்தகர்களுக்கும் மலரில் பிரசுரிப்பதற்கு கட்டுரைகள், கவிதைகள் தந்து உதவிய அறிஞர்களுக்கும் இம் மலரை குறுகிய காலத்தில் அச்சிட்டு தந்த ஏழாலை மஹாத்மா அச்சக உரிமையாளர் மற்றும் அச்சக ஊழியர்களுக்கும் மலர்பற்றிய ஆலோசனைகள் வழங்கிய பெரியோர்களுக்கும் இறுதிவரை என்னுடன் ஒத்துழைத்த செல்வன் சி. நவகாந்தன் அவர்களுக்கும் மலர் வெளியிடுவதற்கு அனுமதி வழங்கிய ஆலய பிரதம குருவும் உரிமையாளருமான சிவஸ்ரீ நா. கனகசபாவதி குருக்கள் அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை அன்புடன் தெரிவிக்கின்றேன்.

என்றும் இறைபணியில்
எஸ். என். இராமச்சந்திரா

மஹோற்சவ மலருக்கு எமது வாழ்த்துக்கள்

உங்களுக்குத் தேவையாம்

பலசரக்குப் பொருட்களை

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

யாழ் நகரில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்

# வி. எஸ். பி. குறூப்

99, 105 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 021 - 2150

கிளை: 275, ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம்

தொலைபேசி இல: 021 - 2653

---

உங்களுக்குத் தேவையான

- கட்டிடப் பொருட்கள்
- பெயின்ற் வகைகள்
- இரும்புச் சாமான்கள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்

நியாய விலையில் விற்கப்படுகின்றன

# ஜெசிபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பானம்

தெலைபேசி இல: 021 - 2407

மஹோற்சவ மலருக்கு

எமது வாழ்த்துக்கள்

இதோ! நற்செய்தி

குறைந்த கட்டணத்துடன்

உள்ளூர் வெளிநாடுகளுக்கான

உடனடித் தொலைத் தொடர்புகளுக்கு

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியில்

அமைதியானதும் பாதுகாப்பானதுமான சூழலில்

தொலைபேசி வசதிகளை

ஜெயா தொலைத்தொடர்பு நிலையத்தினர்

ஏற்படுத்தியுள்ளனர்

(மக்கள் சேவையே எங்கள் சேவை)

தொலைபேசி இலக்கம் உள்நாடு : 0217892

வெளிநாடு : 0094-21-2852

இன்றே விஜயம் செய்யுங்கள்

ஜெயா தொலைத் தொடர்பகம்

பத்திரகாளி கோவிலடி, திருநெல்வேலி.


ஏழாலை மஹாத்மா அச்சகம், சுந்தர்மடம்.